Free Circulation Germany- England

மணி: 70 - ஓசை: 286 ஆடி. July.2020

# வெற்றிமணி

ESTD 1950

Successful Publishing 26 years IN EUROPE


பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# அழகுக்கும் கவர்ச்சிக்கும் பின்னால் இருக்கும் அறிவியல்

Dr.IN

## THE SECRET OF SUBTLE BODY





கோமாவில் இருந்து மீண்டவர் செய்த அதிசயம்!



ஹொலிவுட்டில் கனடிய தமிழ்ப் பெண்!

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

அ.முத்துலிங்கம்



# ஹொலிவுட்டில் கனடிய தமிழ்ப் பெண்!

நான்கு வருடங்களுக்கு முன்னர் ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள். என் வீட்டுக்குத் தன் தாயாருடன் அந்தச் சிறுமி வந்தார். அப்போது நாங்கள் உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக நன்கொடைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தோம். அதற்கு ஆதரவு தெரிவிக்க வந்திருந்த அந்தச் சிறுமிக்கு அப்போது 14 வயது. சிறுமியின் தமிழ்ப் பற்றும், ஆர்வமும் என்னை ஆச்சரியப்படுத்தின. அவ்வளவு திருத்தமாக, அழகாகத் தமிழ் பேசினார்.




இன்று அவருக்கு வயது 18. பெயர் மைத்திரேயி ராமகிருஷ்ணன். [மைத்திரேயி ராமகிருஷ்ணன 28.1.2001 Mississauga Ontrio Canda] உலகப் புகழ் நடிகையாகிவிட்டார். அவர் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்த சர்வதேச இணையத் தொடரே அதற்கான காரணம். புகழ்பெற்ற ஹொலிவுட் நடிகையும், எழுத்தாளருமான மிண்டி காலிங் [Mindy Kaling] எழுத்து, இயக்கத்தில் நெட்ஃபிளிக்ஸ் ஒரிஜினல் வரிசையில் கடந்த ஏப்ரல் 27-ம் தேதி உலகம் முழுவதும் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது.

அந்தத் தொடர் 'நெவர் ஹாவ் ஐ எவர்' [Never Have I Ever]. அத்தொடரின் உருவாக்கமும் கதையமைப்பும் மட்டுமல்ல, அதில் முதன்மைக் கதாபாத்திரத்தில் தோன்றியிருக்கும் மைத்திரேயியின் வெகுயதார்த்தமான நடிப்பு எங்களைப் பிரமிக்க வைத்தது. இணையத்தில் வெளியான 15 நாட்களில் இரண்டு கோடிப் பார்வையாளர்களை ஈர்த்திருக்கும் இந்தத் தொடரால், கனடாவைத் தாண்டி உலகெங்கும் மைத்திரேயிக்குப் பாராட்டுகள் குவிகின்றன.

சமூக வலைத்தளப் பக்கங்களில் அவரை மில்லியன்களில் ரசிகர்கள் பின்தொடர்கிறார்கள். கனடாவில் அவர் படித்த உயர்நிலைப் பள்ளியில் பல நாடகங்களில் நடித்தும், சிலவற்றை எழுதி இயக்கியுமிருந்தார். ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அவருடைய பெற்றோர் [தந்தை. ராம் செல்வராஜா தாய் கிருத்திகா குலேந்திரன்] கனடாவுக்குக் குடிபெயர்ந்தவர்கள்.

முறையாக நடிப்பு பயிற்சி பெறாத ஒருவரால் எப்படி இத்தனை சிறப்பாக நடிக்க முடிந்தது என்பதுதான் ஆச்சரியம்.

இனி அவருடன் நான் உரையாடியதிலிருந்து ஒரு பகுதி.

ஹொலிவுட் தொடருக்கான நட்சத்திரத் தேர்வு எப்படியிருந்தது? அதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது?




என்னுடைய தோழி ஒருத்தி விண்ணப்பம் அனுப்பினார். என்னையும் அனுப்பச்சொல்லி வற்புறுத்தினார். சும்மா இருக்கட்டும் என்று நானும் அனுப்பிவைத்தேன்.

என் வயதையொத்த 15,000 மாணவிகள் விண்ணப்பித்திருந்ததை அறிந்தேன். சுத்தமாக நம்பிக்கை போய்விட்டது. தேர்வுக் குழுவினர் தொடரின் முதல் அத்தியாயத் திரைக்கதைப் பிரதியை அனுப்பி அதில் ஒரு கதாபாத்திரத்தைத் தேர்வுசெய்து, வசனத்தைப் பேசி நடித்து, வீடியோவாகப் பதிவுசெய்து அனுப்பச் சொன்னார்கள்.

அனுப்பினேன். இப்படி ஆறு பிரதிகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அனுப்பினார்கள். சளைக்காமல் எல்லாவற்றுக்கும் நடித்து அனுப்பினேன். ஒவ்வொரு சுற்றிலும் 1000, 2000 பேர் நீக்கப்பட்டார்கள். இறுதிச் சுற்றிலும் தேர்வாகி, ஹாலிவுட்டின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு நேர்முகத் தேர்வுக்கு வரச்சொன்னார்கள்.

நானும் எதிர்பார்ப்பு ஒன்றுமில்லாமல் போய்க் கலந்துகொண்டேன். மீண்டும் கேமரா முன்பு பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் காட்சிகளில் நடித்தேன். எல்லாம் முடிந்த பின்னர், தொலைபேசியில் முடிவை கூறுவதாகச் சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள். அவர்களது செலவில் ஹொலிவுட்டையும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரையும் நன்கு சுற்றிப்பார்த்துவிட்டோம் என்ற திருப்தியுடன் கனடாவுக்குத் திரும்பிவிட்டேன். பள்ளி வாழ்க்கை வழக்கம்போல ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் வீட்டில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். தொலைபேசி ஒலித்தது. எடுத்து காதில் வைத்து எதிர்முனையில் சொன்ன வார்த்தைகளைக் கேட்டேன். 'அவர்களுக்குப் பைத்தியம். அவர்களுக்குப் பைத்தியம்' என்று பைத்தியம்போல் நான் கத்தினேன். என் வாயிலிருந்து வந்த முதல் வார்த்தைகள் அவைதாம். என் வீட்டில் அப்பா, அம்மா என எல்லோரும் துள்ளிக் குதித்தார்கள்.

நான் தேர்வுபெற்றதை குடும்பம் கும்மாளமிட்டுக் கொண்டாடியது. முதல் சீசனில் வரும் பல அத்தியாயங்களில் நீண்ட வசனங்கள் பேசும் காட்சிகளை எப்படிக் கையாண்டீர்கள்?

### படப்பிடிப்பு என்பது மேல்நிலைப்பள்ளி

வகுப்பைப்போலத்தான். அடுத்தநாள் நடக்கப்போகும் படப்பிடிப்புக்கான காட்சிகளின் வசனப் பிரதியைத் தந்துவிடுவார் கள். படப்பிடிப்பு பள்ளி நேரத்தைப்போலவே காலை 9 மணிக்குத்தொடங்கி மாலை 5 மணிக்கு முடிந்துவிடும். இரவில், இது பள்ளிக்கூடப் பாடம் என்று நினைத்துக் கொண்டு கடமையுணர்வுடன் உட்கார்ந்து நான் எனது வசனங்களை மனப்பாடம் செய்தேன். மூன்றாம், நான்காம் நாள் எல்லாம் பழகிவிட்டன.

மூளையைப் பழக்கவேண்டும் அவ்வளவுதான். வசனங்கள் மனதுக்குள் தயாராக காத்திருக்கும்போது கமிரா முன் எனக்குப் பிரச்சனையாகவே இல்லை. ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பில் ஒரு புது மகிழ்ச்சி என்னை ஆட்கொள்ளும். ஏதாவது புதிய விடயம் கற்கும்போது அது பிரமிப்பூட்டும். எவ்வளவு கடினமான காட்சி என்றாலும் அதைத் திருப்தியாக நடித்து முடிக்கும்போது கிடைக்கும் பரவசத்துக்கு அளவே இல்லை.

நீங்கள் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த

28 ஆம் பக்கம் பார்க்க...








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 286



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany
Tel: +49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பத்திரிகையாளரின் 'ரப்ரொப்'

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி



இலங்கைத் தலைநகர் கொழும்பில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் கருத்துச் சுதந்திரத்துக்கு இங்கு இடமுள்ளதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது. அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் பிளாய்ட் கொடூரமாகக் கொல்லப்பட்டதை எதிர்த்து முன்னிலை சோஷலிசக் கட்சி அமைதியாக நடத்திய கவனயீர்ப்புப் போராட்டம் பொலிஸாரால் கடுமையான வன்முறைப் பிரயோகத்துடன் ஒடுக்கப்பட்டது. அதனையடுத்து, பிரபல பெண் பத்திரிகையாளர் தரிசா பஸ்தியனுடைய மடிக்கணினி அவரது வீட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனால் அவர் கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருட இறுதியில் இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற போதே கருத்துச் சுதந்திரம் குறித்த அச்சம் வெளியிடப்பட்டது. கருத்துச் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுத்த பலர் அவசரம் அவசரமாக நாட்டைவிட்டு வெளியேறினார்கள். சன்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றிய தரிசா பஸ்த்தியனும் சுவிட்சர்லாந்து சென்று அங்கிருந்து லண்டனுக்குச் சென்றுவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், அவர் அவசரமாகச் சென்றதாலோ என்னவோ தன்னுடைய மடிக்கணினியைக் கொண்டு செல்லவில்லை. அவரது இல்லத்திலேயே அது இருந்துள்ளது. அதனைத்தான் பொலிஸார் இப்போது கைப்பற்றியிருக்கின்றார்கள்.



இந்த இரண்டு சம்பவங்களும் கருத்துச் சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவில் வெள்ளையினத்தவரான பொலிஸ்காரர் ஒருவர் மே 25 ஜோர்ஜ் பிளாய்ட் என்ற ஆபிரிக்க அமைரிக்கரை கொடூரமான முறையில் கொலை செய்த சம்பவத்துக்குப் பிறகு இனவெறிக்கு எதிராக உலகில் பரவலாக மூண்டிருக்கும் ஆர்ப்பாட்டங்கள் இலங்கை வரையில் பரவியுள்ளது. கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு அருகாமையில் முன்னணி சோஷலிசக் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் பொலிஸாரால் கொடூரமாக ஒடுக்கப்பட்டு அதில் கலந்து கொண்ட சுமார் 55 பேர் கைது செய்யப்பட்டனர்.

'கோவிட் 19' வைரஸ் பரவல் காரணமாக சில சட்டமூலங்களை இலங்கை அரசாங்கம் கடுமையாக்கியிருந்தது. அதில் முக்கியமானது ஒன்றுகூடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு. சமூதாய இடைவெளி பேணப்பட வேண்டும், சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற இரண்டும் முக்கியமானவை. முன்னணி சோஷலிசக் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தில் இந்த இரண்டும் பின்பற்றப்பட்டது என்பது முக்கியமானது. அமெரிக்க துதாரகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டங்களுக்கு நீதிமன்றம் திடீர்த் தடை ஒன்றை விதித்திருந்த போதிலும் கூட, அவ்வாறான கோரிக்கை எதுவும் தம்மால் முன்வைக்கப்படவில்லை என அமெரிக்க தூதரகம் தெரிவித்திருந்தது.

சுகாதார பாதுகாப்பினைக் காரணம் காட்டி பேச்சு சுதந்திரம் முடக்கப்படுகின்றது. பொது மக்கள் தங்களின் அரசியல் கருத்துக்களையும், பொது கருத்துக்களையும் சுதந்திரமான குறிப்பிடுவதற்கு அரசாங்கம் தடை விதிக்கின்றது என்ற குற்றச்சாட்டை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட, பல்வேறு அமைப்புக்களும் முன்வை த்திருந்தன. கொள்ளுப்பிட்டியில் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு நடந்துகொண்ட முறை இந்தக் குற்றச்சாட்டை நிரூபிப்பதாகவே இருந்தது.

அமைதியான முறையிலும், சமூக இடைவெளியைப் பேணியும்,பொதுமக்களுக்கு எந்தவிதமான

27 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனியில் ஐம்பது பேர் கூடும் திருமணங்கள்

## தமிழர்கள் எந்தச் சூழலிலும் வாழக் கற்றுக்கொண்டவர்கள்



றஜீனா தர்மராஜா

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது. இரு மனங்கள் மட்டும் சேர்வது அல்ல இரு குடும்பங்கள் சேர்வது ஆகும். திருமணம் என்பது அழகானது. காதல், அன்பு, புரிதல், விட்டுக் கொடுத்தல் இப்படி பல நல்ல விடயங்களைக் கொண்டது.

இந்நாளை மணமகனும் மணமகளும் அவர்களின் குடும்பங்களும் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள். ஒவ்வொரு விடயங்களையும் பார்த்துப் பார்த்து செய்வார்கள்.

அனைத்தையும் அழகாக திட்டமிட்டுக் கொண்டு இருக்கும் வேலளயில் கொரோனா என்ற நோய்ப்பரவலால் அனைவருடைய கனவுகளும் அழிந்துவிட்டன. நண்பர்களையும், உறவினரையும், ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து ஊர் அறிய திருமணம் செய்ய நினைத்த அனைவருக்கும் மனவருத்தம். ஏனெனில் இன்று யேர்மனியில் ஐம்பது பேர் மாத்திரம் திருமண விழாவுக்கு ஒன்று கூடலாம். யாரை அழைப்பது யாரை விடுவது? இக்கட்டான சூழ்நிலையில் தள்ளுப்பட்டுள்ளனர். என்ன செய்வது?

ஐம்பதோ நூறோ திருமணம் என்பது சிறப்பாக நடக்க வேண்டும். ஆனால் சிலருக்கு மகிழ்ச்சி தருமா? ஐம்பது பேருடன் மாத்திரம்?



மகிழ்ச்சி என்பது எண்ணிக்கையில் அல்ல எங்கள் அனைவரின் மனதில் மட்டுமே! நிறைவாக எங்கள் பண்பாட்டுக்கேற்ப யார் மனதையும் புண்படுத்தாமல் நடப்பதே திருமணம். இந்நிலையில் திருமணங்களில் ஏற்படும் வீண் செலவுகள் தவிர்க்கப்படும். பண்பாடுகள் காக்கப்படும்.

திருமணம் செய்து கொள்பவர்களுக்கு நான் கூற விரும்புவது, நிறைய பேர் வரமுடியாவிட்டாலும் நீங்கள் நினைத்தவாறு, திட்டமிட்டவாறு உங்கள் திருமணங்களை அழகாகவும், நிறைவாகவும் நடாத்துங்கள். நடந்து கொண்டு இருப்பதையும், நடக்கப் போவதையும் நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள். காலங்கள் ஒருபோது நமக்காகக் காத்திருக்காது. அந்த அந்தக் காலத்தில் செய்யவேண்டியதை செய்துகொண்டுதான் இருக்கவேண்டும்.

பலர் கூடிமகிழ்ந்து வாழ்த்தினால் மகிழ்ச்சிதான். அதே நேரம் காலம் நேரம் அறிந்து புரிந்து எங்கிருந்தாலும் நல்வாழ்த்துக் கூறினாலும் அது நலமானதே என உணரவேண்டும். தாயகத்தில் எத்தனை திருமணங்கள் போர்க்காலச்

சூழலில் சுருக்கமாக சிறப்பாக நடைபெற்றன. நாம் எந்தச் சூழலிலும் வாழக் கற்றுக் கொண்டவர்கள்.



# சுருட்டும் சுத்தும்


ஆசி கந்தராஜா

சுருட்டுக்கும் சுத்துக்கும் வித்தியாசமுண்டு. கொட்டிலில் சுருட்டி, அடியை நூலால் கட்டி, மேலும் கீழும் வெட்டி, கோடாப்போட்டு விற்பனைக்கு வருவது 'சுருட்டு'.புகையிலையை முழுதாக வாங்கி [சீவு காம்பு புகையிலை] அதன் பக்கநரம்புகளுக்கு இடையிலுள்ள நெட்டியை கிழித்து காப்பிலையை நடுவில் வைத்து, வீட்டில் சுத்துவது 'சுத்து'.

புகையிலையில் 2 வகைகள் உண்டு. 1. தறிகாம்பு புகையிலை 2. சீவு காம்பு புகையிலை

தறிகாம்பு புகையிலை, வெத்திலையுடன் வாய்க்குள் போடுவது. சிங்கள மற்றும் மலையகப் பகுதியில் அதிகம் பாவிக்கப்படுவது. கோண்டாவில், கொக்குவில், இணுவில் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் விளைவிக்கப்பட்டு, சிப்பம் சிப்பமாக மேற்கே அனுப்பப்படும். இதை 'புகைப் புகையிலை', என்பார்கள். இப்புகையிலையை முதலில் போறணைக் குடிலில் ஊலர்த்தி, பனங் கட்டிப் பாணியில் தோய்த்து மீண்டும் உலர்த்துவார்கள்.

சீவுகாம்பு புகையிலை, சுருட்டு மற்றும் சுத்து தயாரிக்கப் பாவிக்கப்படும். இதை 'குடி புகையிலை' என்னபர்கள்.பெரும்பாலும் கோண்டாவில், கொக்குவில், இணுவில் பகுதிகளில் விளைவிக்கப்படும். இதன் உலர்த்தும் முறை நுட்பமானது. வெட்டி, வாடவிட்டு, கிடங்கில் போட்டு மூடி அவியவிட்டு, புகையிலை போறணைக் குடிலில் உலர்த்தப்படும்.



புகையிலை பதப்படுத்தும் அந்தநாள் ஞாபகம்!




**உண்மைச்சம்பவம்!**

# முற்பிறப்புக் கல்வி இப்பிறப்பில் கூடவந்தது எப்படி?

## கோமாவில் இருந்து மீண்டவர் செய்த அதிசயம்!



**மு.க.சு.சிவகுமாரன்**

நாம் மறுபிறப்பை நம்பலாம்.அல்லது நம்பாமல் இருக்கலாம். ஆனால் இந்தச்சம்பவம் நம்பக்கூடியது ஆதாரம் உள்ளது.இதில் விசித்திரம் என்னவென்றால் ஒருவர் இறந்தபின் மீண்டும் பிறத்தலே மறுபிறப்பு என்றும். அப்படிப்பிறந்தவர்கள் வளரும்போது சிலருக்கு தனது முன்னைய வாழ்க்கை நினைவுக்குவருவதும் அவர்களது தந்தை தாய் மனைவி பிள்ளைகள் என அடையாளம் காட்டுவதும் தமது ஊருக்கு அழைத்துச்சென்று தனது நினைவுகளை அறுதியிட்டுச்சொல்லி திகைப்பில் ஆழ்த்துவதையும் படங்களில் மட்டுமல்ல நிஜவாழ்க்கையிலும் கேள்விப்பட்டு இருக்கிறோம். அது உண்மைடியா அல்லது வெறும் நினைவுகளா என்பது இன்னும் இலங்கையில் தமிழர்களின் தீர்வுகாணாப்படாத தீர்வுப் பொதி போலவே இருக்கிறது.

நான் சொன்ன ஆச்சரியம் இங்கு என்னவென்றால் ஒருவர் இறக்காமல் மீண்டும் மறுபிறப்பு எடுப்பது சாத்தியம் இல்லை. என்பதனை மறுபிறப்பை மறுப்பவர்களும் ஏற்றுக்கொள்வர். ஆனால் இங்கு ஒருவர் தான் உயிருடன் இருக்கும்போதே தனது மறுபிறப்பை எய்தியது அல்லது முற்பிறப்பின் உணர்வுக்கு உள்ளானது ஆச்சரியம் கொள்ளவைக்கிறது. அப்படி ஆச்சரியப்படவைத்தவர் சில மணி நேரத்துள் மீண்டும் தனது நிகழ்கால உடம்புக்குள் திரும்பிவிட்டார்.

யார் அவர்! இச்சம்பவம் அண்மையில் இங்கிலாந்தில் மான்செஸ்டர் நகரத்தில் இடம்பெற்றது. [Teenage striker at Manchester United's academy ] மான்செஸ்டர் யுனைடெட் அகாடமியில் ஒரு நம்பிக்கைக்குரிய டீனேஜ் ஸ்ட்ரைக்கராக உதைபந்தாட்ட வீரரகாக இருந்த ரோரி [Rory Curtis] அவர்களே அந்த நபர்.

என்றுமே கல்லாத பிரஞ்சு மொழியில் சரளமாகப் பேசினார்!

ஆகஸ்ட் 2012 இல் ஒரு மழை நேரத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது. அப்போது அவருக்குவயது வெறும் 22 மட்டுமே.





[Curtis] கர்டிஸ், ஒரு கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிந்தார், கர்டிஸ்,அவர்கள் நெடுஞ்சாலை 42 இல் ஒரு கார் விபத்தில் சிக்கி தோள்பட்டை எலும்புகள் சிதைந்து, இடுப்பு உடைந்து, மூளை ரத்தக்கசிவு மற்றும் பரவலான மூளைக் காயம் ஆகியவற்றால் பெரிதும்பாதிக்கப்பட்டார்.

இந்த விபத்தின்போது அவரை வாகனத்தில் இருந்து மீட்டுடெடுக்க 40 நிமிடங்களுக்கு மேல் தேவைப்பட்டது. விபத்தினால் அவர் கோமா நிலைக்குச் சென்றுவிட்டார். அரசி எலிசபெத் வைத்தியசாலை பேமிங்காம் [Elizabeth Hospital in Birmingham] இல் அனுமதிக்கப்பட்டு பின்னர் Nearby Mosely Hall Hospital மாற்றப்பட்டார்.

'நான் ஒரு குழந்தை என்று நினைத்து கோமாவிலிருந்து விழித்தேன்' அவர் கோமில் இருந்து கண்விழித்தபோது ஒரு பத்துவயது சிறுவன்போலானார். கண்ணாடி முன் நிற்கும்போது தன்னை அவரால் அடையாளம் காணமுடியவில்லை. அப்பொழுது என்றுமே பேசியறியாத பிரஞ்சு மொழியில் சரளமாகப்பேசினார். இதனை அவர் அருகில் இருந்து உதவிய செவிலியர்களில் ஒருவரான ஐஸ்லிங் கிளார்க்சன் கூறினார். அவருக்கு பிரஞ்சுமொழி நன்கு தெரிந்தமையால் அவர் கோமாவில் இருந்து மீண்டதும் பேசிய மொழி பெரும் வியப்பைக்கொடுத்தது. ஒரு கனவைப் போலவே, பிரஞ்சு மொழிபேசும் திறனும் விரைவில் மறைந்து போனது. அப்போது செவிலியார் [தாதி] நீங்கள் பிரான்ஸ் நாட்டில் எந்தப்பகுதியில் வாழ்ந்தீர்கள் எனக் கேட்டதற்கு பதில் தருவதற்கு முன்னர் கர்டிஸ் பத்துவயதில் இருந்து 12 வயதுசிறுவனின் மனநிலைக்கு வந்துவிட்டார், அதன்பின் ஆங்கிலத்தில் மட்டுமே பேசினார். தனது நாய் குட்டி பற்றிக் கேட்டார். அந்த நாய் வளர்ந்து பல வருடங்களுக்கு முன் இறந்தேவிட்டது.

என்ன எப்படி இருந்தாலும் அவர் எப்படி சரளமாக பிரஞ்சுமொழிபேசினார் என்பது பல இலட்சம்கேள்விகளை வைத்தியசாலையில் எழுப்பியது. அவருக்கும் பிரஞ்சு மொழிக்கும் என்ன தொடர்பு என்பததை கண்டுபிடிக்க அவரது தந்தையார் தனது ஆராய்ச்சியை


தீவிரமாக மேற்கொண்டார், அப்போது கர்டிஸ் குடும்பத்தின் மூதாதையர்கள் பிரான்ஸ் நாட்டில் நார்மண்டியில் வாழ்ந்தார்கள் என்பதனைக் கண்டுகொண்டார். ஆனால் அது 1800 ஆண்டுகளில் வாழ்ந்தார்கள் என்பதை உறுதியாக கண்டறிந்தார்.

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# பழங்கள் இயற்கையாகப் பழுத்தவையா அல்லது செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்டவையா என்று எப்படிக் கண்டறிவது?



**பழங்களைப் பழுக்க வைக்க 'கல்சியம் கார்பைடு' கற்கள்..!**

**ஒரு கொந்தல் மாங்காயின் சுவைகூட இன்று இல்லையே!**



ஆசி.காந்தராஜா
(அவுஸ்திரேலியா)

வேகமான வாழ்க்கை முறையால், தற்போது பழங்களைப் பழுக்க வைக்க வியாபாரிகள் இரசாயன முறையைக் கையாளுகின்றார்கள். இப்பழங்களை உண்பதால் வாயில் புண், வயிற்றுப் போக்கு, ஒவ்வாமை போன்ற வியாதிகள் ஏற்பட்டு நாளடைவில் குடல் புற்று நோய் வர வாய்ப்புண்டு. இதற்குக் காரணம் காய்களைப் பழுக்க வைக்க வணிகர்களால் பயன்படுத்தப்படும் 'கல்சியம் கார்பைடு' என்னும் இரசாயனம்தான் என கண்டறியப்பட்டுள்ளது. அது புற்றுநோயை உண்டாக்கக்கூடியது எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இயற்கையில் காய் பிஞ்சுகளை முற்றச் செய்வதும் பழுக்கச் செய்வதும் எதிலீன் என்னும் வாயு நிலை ஹோர்மோனே. இது எல்லாக் காய்களிலிருந்தும் இயற்கையாக வெளியேறும். இருந்தாலும் இது அப்பிள், எலுமிச்சை மற்றும் தோடங்காய்களிலிருந்து பெருமளவில் வெளியேறுவது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதை நமது அன்றாட நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்துப் பார்த்து விளங்கிக் கொள்ளலாம். பெட்டிக்குள் வைக்கோல் போட்டு அடைத்து வைத்த மாங்காய்களும், நிலத்தில் தாட்டுப் புகையடித்த வாழைக் குலைகளும் விரைவில் பழுப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். புகையினாலும் வைக்கோலினாலும் வெப்பம் அதிகரிக்க காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு, காய்களைப் பழுக்கச் செய்யும்.



வெளிநாடுகளில் வாழும் நம்மவர்கள் பலர் அழகுக்காக தோடை, பேரை, அப்பிள் பழங்களை தட்டங்களில் அடுக்கி, அதன்மேல் வாழைப்பழச் சீப்பை வைத்துவிடுவார்கள். இதனால் வாழைப் பழங்கள் மேலும் கனிந்துவிடும். இதேபோல, ஒரு பையில் எலுமிச்சங் காய்களையும் பிஞ்சு வெண்டிக்காயையம் போட்டுக் கட்டி வைத்தால் பிஞ்சு வெண்டிக்காய் முற்றிவிடும். இவை அனைத்துக்கும் காரணம், காய்களில் இருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயுவே!

வசதியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் பெருமளவு பழங்கள் சாப்பிடுவார்கள். இவர்களது உணவில் வாழைப் பழம் முக்கியமானது. இதனால் தினம்தோறும் பல்லாயிரம் மெகாதொன் வாழைப்பழங்கள் சந்தைக்கு வரவேண்டும். இவற்றை ஒரே சீராகப் பழுக்கச் செய்ய, மூடிய கூடாரங்களுள் காய்களை அடுக்கி, சந்தைப் படுத்தலுக்கு முதல்நாள் எதிலீன் வாயு செலுத்தப்படும்.

காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு பெரும் தொகையான காய்களை விரைவில் பழுக்கச் செய்யப் போதுமானதல்ல. இதனால், தேவைப்படும் பெருமளவு எதிலீன் வாயுவை எத்ரெலுடன் சுண்ணாம்பைக் கலப்பதன் மூலம் பெறப்படுகிறது. இத்தொழில் நுட்பத்தின் வேறொரு வடிவமே, கிராமங்களில் வாழைக் குலைக்கு சுண்ணாம்பு தெளித்து, வாழைச் சருகுகளால் மூடிக் கட்டிப் பழுக்க வைக்கும் முறை.

செயற்கையாக தயாரிக்கப்பட்ட எதிலீன் வாயுவும், காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு போன்று சௌக்கியத்துக்கு ஒரு போதும் கேடுவிளைவிப்பதில்லை.

எதிலீன் வாயு தயாரிப்பற்கு ஓரளவு தொழில் நுட்பம் தேவை. இதற்குப் பணம் செலவு செய்ய சிறு வணிகர்கள் விரும்புவதில்லை. இதனால் இலங்கை இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் இப்பொழுது காய்களைக் கனிய வைக்க 'கல்சியம் கார்பைடு' என்னும் இரசாயனப் பொருளைப் பாவிக்கிறார்கள். இதை இரும்பு ஒட்டப் பாவிப்பதால் இரும்புப் பட்டறைகளில் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். இதில் ஆர்செனிக் மற்றும் பொஸ்பரஸ் போன்ற நச்சு இரசாயனங்கள் கலந்திருக்க வாய்ப்புண்டு.



மாமரங்களை வணிகர்கள் மரத்துடன் தீர்த்து, வாங்குவதை அறிந்திருப்பீர்கள். இதன்மூலம் அவர்கள் விரைவாகப் பணம் சம்பாதிக்க முனையும் போது, நமக்கான பிரச்சனையும் ஆரம்பிக்கிறது. மொத்த வியாபாரிகள் பிஞ்சு, அரைமுத்தல், முத்தல் என மாங்காய்களைப் பறித்து மூடிய அறைக்குள் குவித்துவிடுவார்கள். பின்னர் கல்சியம் கார்பைடு கற்களை பொட்டளியாகக் கட்டி மாங்காய்க் குவியலுக்குள் ஆங்காங்கே தாட்டு, மாங்காய்க் குவியலுக்கு தண்ணீர் தெளித்து விடுவார்கள். மாற்றாக கல்சியம் கார்பைட்டை மாவாக்கி தண்ணீரில் கலந்தும் தெளிப்பார்கள். கல்சியம் கார்பைடு நீருடன் சேரும்போது, அசற்றலீன் என்னும் வாயு வெளியேறி காய்களைக் கனிபோன்று தோற்றம் தரும் வகையில் நிறம் மாற்றும்.

கல்சியம் கார்பைடும் அதிலிருந்து வெளியெறும் அசற்றலீனும் மனித சௌக்கியத்துக்கு பெரிதும் தீங்கானவை. இப் பழங்களைச் சாப்பிட்டால் அடிக்கடி வயிற்றுப் போக்கு, வயிறு மந்தம், சருமப் பிரச்னைகள், அல்சர் போன்ற பாதிப்புகள் உண்டாகும். கால்சியம் கார்பைடு கலந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் புற்றுநோய் உண்டாகும்.

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# சிலைகள் உடைப்பதிலும் அகற்றுவதிலும் இலங்கையை வென்றது மேற்குலகம்!






மாதவி

அமெரிக்காவில் கொலம்பஸின் சிலைகள் அழிக்கப்பட்டன. இங்கிலாந்தில் பேடன்பவல் சிலை அகற்றப்பட்டது.

சிலைகள் உடைத்தலும் அகற்றலும் ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டவர்களுக்கும் புதியதொன்றல்ல. இலங்கையில் எப்ப எப்ப கலவரங்கள் வெடிக்குமோ அப்பப்ப முதல் தாக்கப்படுவது யாழ் ஆஸ்பத்தரி வீதியில் உள்ள ஔவையார் சிலை, காந்தியடிகள் சிலை, மற்றும் நல்லூர் சங்கிலிய மன்னன் சிலை, உரும்பிராய் தியாகி சிவகுமாரன் சிலை,என்று சிலவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டில் ஒருபடி மேலாக சிலையகற்றல் சிலை உடைத்தல் என இருக்கும். அங்கும் தேர்தல் முடிவுகளின் பின் சிலையகற்றல் இடம்பெறும். தேர்தல் காலங்களில் சிலை உடைத்தல்கள் அதிகரிக்கும். அது மட்டுமன்றி சினிமா நடிகர்கள் பேச்சுவாக்கில் ஒரு தலைவரைப்பற்றி குறை சொன்னால் போதும், காலையில் பல தலைவர்களது சிலைகளில் தலையிருக்காது ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில் கலைஞர் நிறுவிய கண்ணகி சிலையகற்றல் மற்றும் நடிகர்திலகம் சிவாஜிகணேசன் சிலைகள் அகற்றப்பட்டது மாற்றப்பட்டது.

உயிருடன் இருக்கும்போது அடிவாங்கிய சில தலைவர்கள் இறந்த பின்பும் அடிவாங்கும் கொடுமைகள் தொடரும். நாம் ஏதோ மேற்கு நாட்வர்கள் நாகரீகமானவர்கள் அவர்கள் சட்டம் ஒழுங்கு இவற்றை பெரிதும் மதிப்பவர்கள் என்று எண்ணுகிறோம். நம்புகிறோம். அவர்களும் ஆசிய நாட்வர்கள் எதிர்கொள்ளும் சாவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில் அவர்களும் ஆசியநாட்வர்களாகவே மாறிவிடுகிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும்



தியாகி சிவகுமாரன்

என்றபோது மேற்கு நாட்டவர்கள் ஒழுங்காக இருப்பார்கள். முந்துபவர்களுக்குத்தான் என ஆசிய நாட்வர்களது நிலை வரும்போது அவர்கள் ஆசிய நாட்வர்களைவிட மோசமாக நடப்பார்கள். இதனைக் கொரோணா தீவிரமாகப் பரவுதல் ஆரம்பித் பங்குனி மாதத்தில் காணமுடிந்தது. உதாரணம்: ரொலைட்பேப்ருக்கு போட்ட போட்டியும் சண்டையும்.

தற்போது அமெரிக்காவில் மினியாபோலிஸில் போலீஸ் காவலில் இருந்த ஜார்ஜ் ஃபிலாய்ட் என்ற கறுப்பின மனிதனின் மரணம் தொடர்பாக போராட்டங்கள் தொடங்கியது. இந்தப்போராட்டங்களின் எதிர்ப்பலைகள் பல சிலைகளையும் தாக்கியது. அதனால் ஆசிய நாட்டவர்கள் போல் மேற்குலக நாடுகளிலும் சிலை அகற்றும் படலம் சிலை தகர்க்கும் படலங்கள் வேகமாக அரங்கேறியது.



சங்கிலிய மன்னன்

இங்கிலாந்தில் பூலில் சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ராபர்ட் பேடன்-பவல் சிலை கடந்தமாதம் (11.6.2020) அகற்றப்பட உள்ளது. 'தாக்குதலுக்கான இலக்கு வைக்கப்பட்ட பட்டியலில்' இச்சிலை உள்ளது என்ற பொலிஸ் தகவல்களைத் தொடர்ந்து 12 ஆண்டுகள் பழமையான பேடன்-பவலின் சிலை அதைப் பாதுகாக்க 'தற்காலிகமாக' அகற்றப்பட உள்ளது என்று போர்ன்மவுத் கிறிஸ்ட்சர்ச் மற்றும் பூல் (பிசிபி) கவுன்சில் தெரிவித்துள்ளது. சிலையை அகற்றப்படாது என ஆதரவைக் காட்ட எதிர்ப்பாளர்கள் சிலரும் குவேசைடில் கூடினர்.

1941 இல் 83 வயதில் இறந்த பேடன்-பவல் பிரச்சாரகர்களால் இனவெறி ஓரினச்சேர்க்கை மற்றும் அடோல்ஃப் ஹிட்லருக்கு ஆதரவு என்று எதிர்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளார்.

'லார்ட் பேடன்-பவல் மற்றும் பூல் உடனான சாரணர் இயக்கத்தின் தொடர்புகள் குறித்து உள்ளூர் மக்கள் பெருமிதம் கொள்கிறார்கள் என்பதையும் சிலையை தற்காலிகமாக அகற்றுவதன் மூலம் எதிர்ப்பாளர்களுக்கு நாங்கள் அடிபணிகிறோம் எனச் சிலர் நினைக்கிறார்கள் என்பதையும் நாங்கள் அறிவோம். இருப்பினும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு



08 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

எமது என்று நாங்கள் கருதுகிறோம். வருங்கால சந்ததியினருக்கு ரசிக்கவும் மதிக்கவும் இச்சிலை தேவை. எந்தவொரு அகற்றலும் தற்காலிகமானது என்றும் அது 'அச்சுறுத்தல் நிலை குறைந்தவுடன்' திருப்பித் தரப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்காவில் ஆப்பிரிக்க அமெரிக்கர் ஜார்ஜ் ஃபிலாய்டின் காவலில் இருந்தவர் மினியாபோலிஸில் அவரது மரணம் அமெரிக்காவிலும் சர்வதேச அளவிலும் பொலிஸ் மிருகத்தனத்திற்கும் இன சமத்துவமின்மைக்கும் எதிராக ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுத்தது. வர்ஜீனியாவின் ரிச்மண்டில் புதன்கிழமை (03.06.2020) இரவு கூட்டமைப்புத் தலைவர் ஜெபர்சன் டேவிஸின் சிலை கவிழ்ந்தது. பாஸ்டன், மியாமி மற்றும் வர்ஜீனியாவில் உள்ள கொலம்பஸின் சிலைகள் அழிக்கப்பட்டன.

**ஆர்ப்பாட்டங்களை குறிவைத்த சிலைகளுக்கு பின்னால் உள்ள கதைகள்**

1861-65 அமெரிக்க உள்நாட்டுப் போரில் கறுப்பின மக்களை அடிமைகளாக வைத்திருக்க போராடிய தென் மாநிலங்களின் ஒரு குழுவான கூட்டமைப்பிற்கான நினைவுச் சின்னங்கள் இலக்கு வைக்கப்பட்டவர்களில் அடங்கும்.

ரிச்மண்டில் உள்ள நினைவுச்சின்ன அவென்யூவில் உள்ள பல கூட்டமைப்பு சிலைகள் போராட்டங்களின் போது கிராஃபிட்டியால் குறிக்கப்பட்டுள்ளன. இந்த வார தொடக்கத்தில் இத்தாலிய ஆய்வாளர் கொலம்பஸின் சிலை ஒன்றை ரிச்மண்ட் கண்டார், கீழே இறக்கி, ஒரு ஏரியில் வீசினார். காலம்பஸின் மூன்று மீட்டர் உயர (10 அடி) வெண்கல சிலை மினசோட்டாவின் செயிண்ட் பால் நகரில் கவிழ்ந்தது.

நகரத்தின் மையப்பகுதியில் ஒரு அஸ்திவாரத்தில் நிற்கும் பாஸ்டனில் உள்ள கொலம்பஸ் சிலை தலை துண்டிக்கப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டில், 'புதிய உலகம்', அமெரிக்காவைக் கண்டுபிடித்த பெருமைக்குரிய பள்ளி பாடப்புத்தகங்களில் பெருமை பெற்ற கொலம்பஸின் நினைவை அமெரிக்காவில் பலர் கொண்டாடுகிறார்கள். ஆனால் பூர்வீக அமெரிக்க ஆர்வலர்கள் கொலம்பஸை நீண்டகாலமாக எதிர்த்தனர், அமெரிக்காவிற்கு அவர் மேற்கொண்ட பயணங்கள் தங்கள் முன்னோர்களின் காலனித்துவம் மற்றும் இனப்படுகொலைக்கு வழிவகுத்தன என்று கூறிகிறார்கள்.










# லிங்கன் தன் மகனைப் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்ச்சி தரும் கடிதம்...

அனைத்து மனிதர்களுமே நேர்மை யானவர்களாக, உண்மை யானவர்களாக இருக்கமாட்டார்கள் என அவனுக்குச் சொல்லித்தாருங்கள். ஆனால், பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்கு தெரிவியுங்கள்.

பொறாமை அவன் மனதை அண்டாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது, கோழைத்தனம் என புரியவையுங்கள்.



புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்துகாட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குகற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரிதத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் ரசிக்க கற்றுத்தாருங்கள் அவனுக்கு. ஏமாற்றுவதைவிடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட, சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனை தயார்படுத்துங்கள் அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும், உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்கு புரியவையுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளிநகையாடவும், வெற்று புகழுரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சி கொடுங்கள். அவனைக் கனிவாக நடத்துங்கள். அதிக செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம்.

சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மவுனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லி கொடுங்கள். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான்...

இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

**இப்படிக்கு,**
**ஆபிரகாம் லிங்கன்**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## என்னவாயிற்று இவர்களுக்கு

# செக்ஸ் வேண்டாத இளைய தலை முறை



Dr.IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

'பிஞ்சிலை பழுத்திட்டுதுகள். முளைக்க முதல்; பிடிச்சுக் கொண்டு திரியிதுகள். கொஞ்சம் வளர்ந்திட்டால் கடற்கரை பார்க் எல்லாம் முகம் உரச நாட்டியம் போடுதுகள். காலம் கெட்டுப் போச்சு'.

இன்றைய இளைய தலைமுறையினர் பற்றிக் காட்டமாகப் பொரிந்து தள்ளினார் ஒருவர்.

உண்மைதான். மேலாடை தணிந்து இரு பூவுகுகள் மிதக்க, கீழாடை மேலேறி மதர்த்த தண்டங்கள் பளபளக்க தெருவெங்கும் இலவச கண்காட்சிகள் அரங்கேறும்போது, காலமும் நாமமும் நாறுவதை தவிர வேறு என்ன நடக்கும்.

ஆனால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இன்றைய சூழலில் குழந்தைகள் விரைவிலே உடல் வளர்ச்சிடைகிறார்கள். பராயமடைவது முந்தி வருகிறது. கையைச் சூப்பி நிற்கும் காலத்திலேயே வேறெதையோ நாடும் காலமாகிவிட்டது.

உண்மையில் பாலுணர்வும் பாலுறவும் மனித வாழ்விற்கு இன்றியமையாதனவே.

காதல், காமம், புணர்வு, மகப்பேறு – இவை இல்லையேல் உயிரனத்தின் நீட்சி தடைப்பட்டுப் போகும். ஆனால் பாலுறவு ஆனது மகப் பேற்றிற்கானது மாத்;திரமல்ல. அதற்கப்பாலும் அதன் மகத்துவம் தொடர்கிறது.

மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சுயமதிப்பை மேம்படுத்துகிறது, பிறர்; மீதான அன்பிற்கும் காதலுக்கு வலுவூட்டுகிறது. மிக மகிழ்ச்சியான ஆரோக்கியமான பொழுதுபோக்காகவும் இருக்கிறது.

நெறி தவறி பாலியல் நோய்களைத் தேடிவாங்கும் உறவு பற்றி இங்கு நான் பேசவில்லை.

ஆனால் அண்மைய அறிக்கை ஒன்று பாலுறவு விடயத்தில் மனித சமுதாயத்திற்கு சிகப்பு சமிக்கை காட்டுகிறது.

### செயற்பாட்டில் தளர்வு

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடுவது படிப்படியாகக் குறைந்து வருகிறதாம். முந்தைய தலைமுறையினரோடு ஒப்பிடும் போது இன்றைய தலைமுறையினர் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே செயலில் இறங்குகிறார்களாம். பார்க்கிறார்கள் பேசுகிறார்கள் ஆபாசமாகக் கிண்டலும் அடிக்கிறார்கள். வெளிப்படையாகக் கிலேசேமின்றி அது பற்றி கலந்துரையாடவும் செய்கிறார்கள்.

ஆனால் அதற்கு அப்பால் ..?

பிரித்தானியாவில் செய்யப்பட்ட 'வாழ்க்கை முறை மற்றும் பாலியல் மனப்பான்மை தொடர்பான கருத்து' ஆய்வில் இது கண்டறியப்பட்டது. ஆய்வைச் செய்தவர்கள் ருணடிநுசளவைல College London ஆகும்.

16 முதல் 44 வயதுள்ளோர் உடலுறவில் ஈடுபடுவது கடந்த இரு தசாப்தங்களாகக் குறைந்து வருகிறதாம். இப்பொழுது பெண்கள் சராசரியாக மாதத்தில் 4.8 தடவையும் ஆண்கள் சராசரியாக 4.9 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். பத்து வருடங்களுக்கு முன் இது முறைப்படி 6.3 ம், 6.2 ம் ஆக இருந்ததாம். அதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இதுவே முறையே 6.1ம் 6.4 லும் ஆக இருந்திருக்கிறது.



சரி முதியவர்கள் என்ன செய்கிறார்கள்?. முதியவர்கள் எனும்போது 65 முதல் 74 வயதானவர்களை இங்கு குறிக்கிறது. 'தேவாரம் திருவாசகம் ஜபம் தியானம், ஸ்தோத்திரம் என முக்திக்கு வழி தேடிக்கொண்டிருப்பார்கள்' என நினைக்கிறீர்களா?

இல்லை. அவர்களும் பாலுறவு வைக்கிறார்கள். வயதான பெண்கள் சராசரியாக மாதத்தில் 1.4 தடவையும் ஆண்கள் சராசரியாக 2.3 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். அவர்கள் வயதிற்கு அது போதுமானதாக இருக்கலாம். முந்தைய தசாப்தங்களில் அவர்களது செயற்பாடு பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

### காரணங்கள் என்ன?

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடும் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கு காரணம் என்ன?

நவயுகத்தின் அவசரமும், நேரமின்மையும் பன்முகமான சமூக ஈடுபாடுகளும் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள். தொழிலைத் தக்க வைத்திருக்க வேண்டியுள்ளது. பணத்தின் தேவைக்கு எல்லையே அற்றுப் போய்விட்டது. இதனால் ஏனையவற்றில் ஈடுபடுதல் குறைந்திருக்கலாம்.

### அடுத்த காரணம் நவீன தொழில் நுட்ப வசதிகளாகும்

ஒருவரில் ஒருவர் ஈடுபாடுள்ள இளைஞனையும் யுவதியையும் ஒரு அறையில் அடைத்து வைத்தால் என்ன நடக்கும்? கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து .... எல்லாம் நடக்கும்.

ஆனால் அந்த அறையிலேயே இணைய வசதியுடன் ஜபாட் அல்லது டப்லட் கிடைத்தால் நிலைமை தலைகீழாக மாறிவிடும். டக் எனக் கிளிக் பண்ணி ஈ மெயிலை அல்லது மெசேஜைப் பார்ப்பார்கள். தனிப்பட்ட செய்திகள் முதல் உலக நிலவரங்கள் வரை எதையும் தான் தப்பவிட்டு விடக் கூடாது என்ற என்ற ஆழ்மன உந்துதல் காரணமாகும். ஆம் கம்பியில்லாமலே எங்கணும் கிடைக்கும் இணைய வசதி மனிதர்களின் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது.



இப்பொழுது பாலுறவு கொண்டால் எவற்றையெல்லாம் இணையத்தில் இழக்க நேரிடும். தப்பவிடக் கூடா தவற்றைக் கவனித்துவிட்டு சற்று நேரம் தள்ளி உறவு கொள்ளலாமா என்று பலர் யோசிக்கும் அளவிற்கு நவீன தொடர்பு சாதன வசதிகள் மனித வாழ்விற்குள் ஆழ ஊடுருவி விட்டன.

பேஸ்புக், வட்ஸ்அப், ருவீட்டர் போன்றவை எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் மனித உறவுகளை உள்ளங்கையிற்குள் நெருங்கிக் கொண்டு வருவது உண்மைதான். ஆனால் தத்தமது கணனிகளுக்குள்ளும் ஜபாட்களிலும் மூழ்கிக் கிடப்பதால் அருகில் இருக்கும்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மூச்சுவிட இடம் தேவை



**கௌசி**

### புணர்தலும் பிரிதலும்

ஒத்த அன்பினராகிய ஒருவரும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்தில் பிறந்த பேரின்பம் காதல் எனப்படுகின்றது. சங்ககாலத்திலே காதல் என்பது பேரின்பமாகவே கருதப்பட்டது. இந்த காதலர் இருவர் கருத்தொருமித்து உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து தமக்குள் இன்பம் துய்த்து வாழ்தல் காதல் என்று நச்சினார்க்கினியர் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். அக்காலத்திலே திருமணம் என்ற முறை இருக்கவில்லை. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப அதாவது கரணம் என்றால், சடங்குகள். இந்த திருமணச் சடங்குகள் வந்தமைக்குக் காரணம் களவில் கூடிய காதலன், களவு வெளிப்படும் காலத்தில் நான் அப்பெண்ணைக் கண்டதில்லை என்று கைவிட்டு விடும் நிலை மேலோங்கிக் காணப்பட திருமணச் சடங்கு முறைகள் வழக்கத்திற்கு வந்தன. இவ்வாறே மணவினை முடித்து இன்பம் துய்த்திருப்பது இயற்கை. எதுவாக இருந்தாலும் வேறு வேறு குடும்பச் சூழலில் இருந்து வெவ்வேறு குணாதிசயங்கள் உள்ள இருவர் இணைகின்ற போது சிற்சில விட்டுக் கொடுப்புக்களும், புரிந்துணர்வுகளும் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. விருப்பு வெறுப்புக்கள் ஆளுக்காள் மாறுபடலாம். அதனைப் புரிந்து நடந்து கொள்ளும் போதே மனக்கசப்புக்கள் குறைந்தளவில் ஏற்பட்டு மணவாழ்க்கை சுமுகமாக அமையும்.

சென்ற ஆறு மாதங்களில் திருமண பந்தத்தை அறுப்பதற்காக பதிவு செய்துள்ளோர்களின் புள்ளிவிபரம் அதிகரித்துக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இதற்குக் காரணம் யாது? மனக்கசப்பும் மனச்சோர்வுமே இதற்குக் காரணங்களாக அமைகின்றன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜப்பான் குறைந்த வாடகையில் தங்கும் விடுதிகளை அமைத்து ஒருநாளுக்கு 36 ஒயிரோக்களை சம்பாதிக்கின்றனர். இளந்தம்பதிகளுக்குத் தம்முடைய தாம்பத்ய வாழ்வை சரியான முறையில் நடத்தத் தெரியவில்லை, விட்டுக் கொடுப்புக்கள் இல்லை, புரிந்துணர்வு இல்லை, சகிப்புத் தன்மை இல்லை. எத்தனை பேரைத்தான் தெரிவு செய்து வாழ்வார்கள்? பிடிக்கவில்லை, பிரிகின்றோம் என்று இவர்களுக்கு எத்தனை பேரைப் பிடிக்காமல் போகும்? என்று பலவாறாகப் பேசும் பெரியவர்களே இக்காலங்களில் என்னையும் அவளையும் வெட்டி விடுங்கள் கடைசிக் காலத்தில் நிம்மதி வேண்டும் என்று விவாகரத்துக்குப் பதிவு செய்கின்றார்கள். இல்லையென்றால், இவ்வாறான விடுதிகள் தேடிப் போகின்றார்கள். இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால், மனம் என்பது ஆளுக்காள் மாறுபட்டுத்தான் உருவாக்கப்படுகின்றது. மனப்பதிவுகளும் அவருக்கு ஏற்றாற்போலவே பதியப்படுகின்றன. மூலத்தை மாற்ற முடியாது என்றே கருதுகின்றேன். மாற்றத் தொடங்கினால், மனஅழுத்தம் ஆரம்பமாகும். முதுமையென்ன, இளமையென்ன உணர்வு என்பது ஒன்றே.

கொரொனாக்கு 1.5 மீற்றர் இடைவெளி தேவை போல் கணவன் மனைவிக்கு இடையிலும் இவ் இடைவெளி தேவைப்படுகின்றது போலும். கணவன் வீட்டில் இருக்கின்ற போது தம்முடைய சுதந்திரம் பறி போவதாகவும், தம்முடைய நாளாந்த வேலைகள் அதிகமாக இருப்பதாகவும் பெண்கள் கருதுகின்றார்கள். அதிகமான நேரம் ஒன்றாக இருக்கும்போதும், நெருக்கம் அதிகமாகும் போதும் வாக்கு வாதங்கள் அதிகரிப்பதாகவும் தம்முடைய சகல விடயங்களிலும் ஒருவருக்கொருவர் தலையிட்டு பிரச்சினைகளை அதிகரிப்பதாகவும் இருவரும் கருதுகின்றார்கள். வீட்டில் இருக்கும் ஆணுக்குத் தேவையான சுகங்களைப் பெண் கொடுக்காத பட்சத்தில் கருத்து வேறுபாடுகளும் மன உழைச்சல்களும் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இருப்பது நிஜமே. கோபம் வந்தால், அதனைத் தவிர்ப்பதற்கு வெளியே போகின்ற நிலை கடந்த மாதங்களில் சாத்தியப்படவில்லை. ஆளுக்காள் பேச்சு வளருகின்ற போது மனக்கசப்புக்கள் ஏற்படுவது இயல்பே.

எனவே ஒருவருக்கொருவர் சுமையாக இல்லாமல் சுகமாக இருக்கும் பட்சத்தில் வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகிக்கும். யாராக இருந்தாலும் சிறிதளவு மூச்சுவிட இடம் தேவை.



## ஊரடங்கில் அமோக விளைச்சல்

இலங்கையில் கொரோனா பாதிப்பின் போது நாடு முழுவதுமான ஊரடங்கு காலப்பகுதியில் உப உணவுப் பயிர்கள் இலங்கையில் பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு, செங்கலடி பதுளை வீதி, மரப்பாலம் ‘ஏ’ கமநல அமைப்பின் ஏற்பாட்டில் இவ் உப உணவுப் பயிர்கள் அறுவடைவிழா கடந்த வாரம் மரப்பாலத்தில் இடம்பெற்றது.

கொரோனா பாதிப்பினால் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் உள்நாட்டு உற்பத்திகளைக் கொண்டே மக்கள் தம் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதால் உள்நாட்டு உற்பத்திகளையும் பயிர்ச்செய்கைகளையும் மேம்படுத்தும் பல செயற்றிட்டங்கள் அரசாங்கத்தினாலும் அரச சார் நிறுவனங்களினாலும் முன்னெடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

அதன் ஒரு கட்டமாக இவ் அறுவடை விழா வெற்றிகரமாக நிறைவேரியிருப்பது பிரதேச மக்கள் மத்தியில் திருப்தியையும் குதூகலத்தையும் தந்துள்ளது.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# தோற்றுநிலை நெருக்கடியும் பணக்கவலையும்





Dr. Pushpa Kanagaratnam
Ph.D. C. Psych.
Clinical Psychologist

நீண்டுகொண்டு செல்லும் தொற்றுநிலை கட்டுப்பாடுகளால், பலரும் வேலை இழந்திருக்கிறார்கள். பல வியாபாரங்கள் முடக்கப்பட்டிருக்கின்றன. ஆரோக்கியம் சார்ந்த கவலைக்கும் மேலாக பொருளாதார கவலையும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

பொருளாதாரத் துறையை சார்ந்த வல்லுநர்கள் மக்கள் பழக்கவழக்கங்களை வைத்து முக்கியமான 3 ஆலோசனைகளை தெரிவிக்கிறார்கள்.

**1. திடுதிப்பென முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.**

இந்த COVID-19 தொற்றுநிலை பாரதூரமானதாக இருக்கிறதென்றாலும், இதற்கு ஒரு முடிவு இருக்கத்தான்



போகிறது என்கிறார் பொருளாதார உளவியலில் பேராசிரியராக இருக்கும் Dr. Brad Klontz. உங்கள் பொருளாதார நிலை சார்ந்த அச்சத்தைப் போக்க பரந்த கண்ணோட்டம் தேவை என்கிறார் முடழவெண. காலப்போக்கில் இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு இருக்கும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும், அதோடு, அனாவசிய பீதி உங்கள் பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்க வாய்ப்பிருக்கிறது என்றும் எச்சரிக்கிறார். முன்னோரு போதும் இப்படியான பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை என்று நாங்கள் எண்ணலாம். ஆனால் பின்னோக்கி பார்த்தோமானால், நம் இப்படியான



நெருக்கடிகளை காலம் காலமாக அனுபவித்து தான் வந்திருக்கிறோம் என்பது புரியும். 2008 ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது, பலரும் உலகம் முடிவுக்கு வரப்போகிறது என்பது போல் உணர்ந்தார்கள். பீதியால் பல தற்கொலைகள் கூட நிகழ்ந்தன. ஆனால் அந்த நெருக்கடிக்குள் இருந்து மீண்டு வந்தவர்கள் பலர். ஆரோக்கியம் சார்ந்த கவலையோடு பணக்கவலையும் சேர்ந்து கொண்டால், அச்சம் இரட்டிப்பாகிவிடும். அந்த பீதியோடு நாம் போடும் மனக்கணக்கு ஒரு அபாயமான பாதைக்குள் எம்மை தள்ளிவிடும் என்கிறார் Klontz.



Catastrophic thinking, அதாவது பேரழிவுச் சிந்தனை, எம்மை பாரதூரமான முடிவுகளுக்கு தள்ளிவிடும். சிலர் பங்குச்சந்தையில் தம் பங்கினை எல்லாம் அவசரமாக விற்பதில் இறங்கிவிடுவார்கள். இதே சிந்தனை தான் இன்னொருவரை ஒரு வருடத்திற்கு தேவையான toilet paper இனை வேண்டி அடுக்கத் தூண்டுவது. லண்டன் business school பேராசிரியர் Dr.Alex Edmans இதே கருத்தை முன்வைக்கிறார். எங்கள் உணர்வுக் குழப்பங்கள் எம் பொருளாதார நிலைமையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்கிறார்.

பொதுவாகவே, பொருளாதார உலகத்தில், நேர்மறையான நிகழ்வுகளை விடவும், எதிர்மறையான நிகழ்வுகளுக்கு நாம் அதிக முக்கியம் கொடுக்கிறோம், என்கிறார் நுனஅயளெ. தன் ஆய்வுக்கட்டுரை ஒன்றை மேற்கோள் காட்டி அவர் சொல்லும் ஒரு உதாரணம் என்னவென்றால், ஒரு நாட்டின் கால்பந்தாட்ட அணி உலக கோப்பைக்கான ஆட்டத்தில் தோற்ற பொழுது, அவர்கள் பங்குச்சந்தை அடுத்த நாளே பெரும் வீழ்ச்சி கண்டது. ஆனால் ஒரு அணி வெற்றி பெற்ற பொழுது, எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்கவில்லை. அணியின் வெற்றியினால் பங்குச்சந்தையில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே, உங்கள் உணர்வுகள் உங்களை பிழையான முடிவுகளுக்கு இட்டுச்செல்வதை நீங்கள் தவிர்க்க வேண்டும். அதீதமான செய்தி நுகர்வை தவிர்த்தல், அவசர கதியில் முடிவுகள் எடுத்தலை தவிர்த்தல் முக்கியம். நம்பிக்கையான தகவல் தளங்களை வாசியுங்கள். புதிய வழிகளில் பணம் கொண்டுவர எத்தனிக்கலாம். அத்தியாவசியமற்ற செலவுகளை குறைக்கலாம். உங்கள் வரவு செலவுகளை மீளாய்வு செய்ய இந்த காலகட்டத்தை நீங்கள் பயன்படுத்தலாம்.

**2. சாத்தியப்படக்கூடிய மிக மோசமான ஒரு பொருளாதார நிலையை கற்பனை செய்து பாருங்கள். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், நீங்கள் என்ன செய்யலாம் என திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.**

இந்த COVID-19 க்கு முன்பே பணம் பலருக்கும் ஒரு மன உளைச்சலை தரும் விடயமாகத்தான் இருந்திருக்கிறது. ஏனென்றால், ஒரு பண நெருக்கடி வரும் போது, அது எம்மை உச்சக்கட்ட நிலைக்கு தயாராக்கிவிடும். இதனை உளவியலில், fight-or-flight response மூலமாக விளக்கலாம். அதாவது, எம் முன்னோர்கள், வேட்டையாடி வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. அப்பொழுது, காட்டுக்குள் போனால், ஒரு சிங்கத்தை கண்டால், உங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்ள, ஒன்று நீங்கள் தப்பி ஓட வேண்டும் அல்லது நின்று சண்டையிட வேண்டும். அதற்கு உங்கள் உடலையும் மனதையும் தயாராக்க, உங்கள் இதயம் படபடவென அடிக்கும். அது இரத்த ஓட்டத்தை அதிகரிக்க செய்து உங்களை சுறுசுறுப்பாக்கும். தசைகள் இறுகும். உடல் வியர்க்கும். நீங்கள் சிங்கத்தோடு சண்டையிடவோ, அல்லது தப்பி ஓடவோ இந்த தயார் நிலை முக்கியம். இது இயல்பாகவே எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள உதவுகிறது....

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# அம்மா சமைத்த உணவில் அத்தனை இனிமை எப்படி?

கடைசி உருண்டையில்தான் அதிக சத்து உண்டு என்று அத்தனை உணவையும் ஊட்டி விடுவார் அம்மா என்பார்கள் .

அவரை மகிழ்விக்க வேண்டுமானால் இன்னொரு கோப்பை உணவு கேட்டாலே போதும். இது எத்தகையதொரு உன்னத உணர்வு. உணவுக்கும், உணர்வுக்கும் அப்படி என்ன ஒரு நெருக்கம்? ‘அழுதுகொண்டு சமைக்காதே’, ‘துயரத்தோடு உணவருந்தாதே’, ‘இன்னார் கையால் வாங்கி உண்ணாதே’ ‘அடுப்பங்கரையில் நின்று அழாதே’ என பெரியோர்கள் கூறிக் கேட்டிருக்கிறோம். இவை நேர்மறை மற்றும் எதிர்மறை அதிர்வலைகளைக் குறிப்பன. வெறும் அடுப்பு தானே என்றல்லாது அடுப்பிற்கு நீறிட்டு, பொட்டிட்டு பின் வைக்கும் உலைப்பானையை தொட்டு வணங்கும் பக்குவம் எப்படி உருவாகிற்றோ? அடுப்பங்கரைக்கு ஏன் இத்தனை மரியாதை?

பாரப்பரிய வாழ்வில் ஒரு திருமண வீட்டிற்கோ அல்லது விருந்தினர் வீட்டிற்கோ தாயாருடன் பிள்ளைகள் யாரேனும் சென்றுவிட்டால் உணவு பரிமாறும் வேளையில் பெரும்பாலான அன்னையர் தம் பிள்ளைக்கு தாமே எடுத்து பரிமாறுவதாக இடைமறிப்பார்கள். இதையே அந்த பிள்ளையும் விரும்பும். அன்னைக்கு நன்கு தெரியும் எதை அதிகம் விரும்பி தன் பிள்ளை உண்ணும் என்றும், எவ்வளவு உண்ணும் என்றும், தன் கையால் அன்போடு பரிமாறும் போது கூச்சமின்றி பிள்ளை உண்ணும் என்பதும் அன்னை நன்குணர்வார். பொதுவாக ஒரு அன்னை உணவு தயாரிக்கும் போது அந்த தருணத்திலேயே அக்கறை, அன்பு, என்ன சத்துக்கள் தேவை என்ற கவனம், மற்றும் தான் அறிந்து வைத்திருந்த உணவுப் பத்தியமுறை, மருத்துவம் எல்லாமே சரியாக கவனிக்கப்பட்டிருக்கும். இவை எல்லாவற்றையும் விட அன்பினால் ஏற்படும் நல்ல நேர்மறையான அதிர்வலைகள் அந்த உணவில் இருக்கும். ஏனெனில் இது அந்த தாயின் உருவாக்கத்தில் அமைந்த குடும்பம் எனப்படும் தன் நேசத்துக்கான கோயில்.

சமையல் கலை என்பது வெறுமனே சுவையாக சமைக்க தேர்ச்சி பெறுதல் என்பதல்ல. அது ஒரு படைப்பு, தாய்மை நிறைந்தது. இது மிக கவனத்தோடு தூய தவம் போன்று மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு. அதனால் தான் அதனை ஏற்பவர்கள் இல்லத்துக்கு அரசி எனப்படுகின்றனர். அதற்காக வேறு உறவு முறையினர் சமையல் செய்யக்கூடாது என்று பொருளல்ல. அந்த பொறுப்பை ஏற்பவர் மிகவும் தூய எண்ணத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். எம் உணவின் இயல்பை அறிந்தவர்கள் பரிமாறுவதற்கும் பிறர் பரிமாறுவதற்கும் நிறையவே வேறுபாடு உண்டு.




குறிப்பாக நீண்ட காலமாக அறிமுகம் ஆன ஒரு மனிதனை சந்தித்துக் கொள்ளும் பொழுது அவருடைய தன்மைகளை எப்படி நாம் இலகுவாக புரிந்து கொள்கின்றோமோ அதேபோலவே எங்கள் மரபணுக்களுக்கு பரிட்சயம் ஆன உணவுகளை நாம் உண்கின்ற பொழுது அந்த உணவு எம் மரபணுக்களுடன் இலகுவாகவே கலந்து இசைந்து போய் விடுகின்றன. மாறாக புதிது புதிதாக ஒத்துவராத உணவுகளை நாம் உண்கின்ற பொழுது மரபணுக்கள் குழப்பம் அடைந்து எதிர்விளைவுகளை உருவாக்கி விடுகின்றன.

பொதுவாக உணவுப் பொருளானது உற்பத்தியின் நிலத்தின் தன்மை தொடங்கி அறுவடையாளர், சந்தைப்படுத்துபவர், விற்பனையாளர், கொள்வனவாளர் என எல்லோருடைய எண்ணங்களின் அதிர்வலைகளைத் தாங்கியே வீட்டிற்கு வருகிறது. அந்த அதிர்வலையோடான உணவில் அதனை உண்ணுவதற்கு முன் உள்ள படிநிலையில் ஏற்படும் அதிர்வலை நேரடியாக உண்ணும் போது உள்ளெடுக்கப்படுகிறது. உணவை சமைக்கும் மனிதர்களின் உணர்வுகளின் தன்மைக்கு ஒப்ப அந்த உணவை உட்க்கொள்ளும் மனிதர்களுக்கும் அந்த உணர்வு கடத்தப் பட்டு விடும். இவை தத்தம் அனுபவங்களுக்கு உட்படாத வரை விந்தையாக தோன்றலாம் ஆனால் ஒவ்வொரு பொருட்களுக்கும் அவற்றின் தன்மைக்கேற்ப ஞாபக சக்தி இருக்கின்றது. அவையவை அவற்றின் தன்மைக்கேற்ப உணர்வுகளுடன் கலந்து கொள்கின்றன.

இந்த சிக்கலை அறிந்து தப்பிப்பது எப்படி எனப் பயம் கொள்ளத் தேவையில்லை நேர்மறையான எண்ணங்களோடான ஒரு அன்பான தீண்டல் அந்த உணவு சுமந்து வந்த அத்தனை அதிர்வலைகளையும் நிமிடத்தில் நல்லபடி மாற்றிவிடக் கூடியது. இத்தகைய நிலைப்பாட்டை உணவகங்களிலோ, சமையல் வேலையாட்களிடமோ வெறுப்போடு இருக்கும் ஒருவரிடமிருந்தோ முழுமையாக எதிர்பார்த்துவிட முடியாது. ஆனால் யாராக இருப்பினும் அன்போடும், அக்கறையோடும் நேர்மறையான எண்ணத்தோடு சமைத்து பரிமாறும் உணவு அன்பான தாய் பரிமாறும் உணவு போன்றதே.


கரிணி

இன்றைய காலத்தில் எத்தனையோ குளறுபடியான சின்னத்திரை நாடகங்களை பார்த்துக்கொண்டு துயரம், வெறுப்பு போன்ற எதிர்மறை எண்ணங்களோடு சமையல் செய்வதும் அல்லது அதனை ஒரு சிரமமான ஒரு வேலையாக நினைத்து செய்வதும், உள்ளத்தில் கவலை, பயம் போன்ற எதிர்மறை எண்ணங்கள் உள்ள பொழுதுகள் மற்றும் உடல்சுகவீனமான பொழுதுகளில் சமைப்பதும் நல்லதல்ல.

28 ஆம் பக்கம் பார்க்க...






**ஒரே ஒரு ராஜ இசை வண்டு, பல மலர் மனங்களை முத்தமிட்டு செல்வதைக் கண்டதுண்டா ?**

உயிருக்குள் ஊடுருவி உணர்வினைத் துளைக்கும் இசையின் சிறப்பைப் பாடாத தமிழக் கவிஞன் இருக்க முடியுமா? தமிழ்க் கவிஞன் என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கான காரணம் உண்டு. ஆம், இயல் , இசை, நாடகம் இவை மூன்றும் சேர்ந்ததே தமிழ். இதற்க்கு இணங்க, செறிந்த சொல்லாட்சி, சிறந்த ஓசை நயம், அரிய கற்பனை வளம் இவை மூன்றும் சேர்ந்து வடித்த கவிதை காலம் கடந்து போற்றப்படும் என்பதில் நம் தமிழ்க் கவி மரபில் சந்தேகமே இல்லை.

இசையின் தாக்கத்தினால் காலத்தை வென்ற காதல் ஒன்று உண்டாகிறது. இந்தச் சம்பவத்தைக் காலத்தை வென்று நிற்கும் கவிஞன் தன் கற்பனையிலேற்றி ஓசை கூட்டித் தேர்ந்த மொழிநடையில் சொல்ல முனைந்தால் ????

ஆஹா! கவிப்ரியர்களுக்கு இன்பக் களி அல்லவா ? களி வரலைக் கருதிக் கனவு கண்ட கவிக்கோமான் பாரதிக்கு இசை மீதுள்ள உன்னத உணர்வை அவன் தீட்டிய 'குயில் பாட்டு ' என்னும் கவிதையின் அடிகளைத் துணைகொண்டு எடுத்துக் காட்ட முயல்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஓர் ஆண் அல்லது பெண் இசைக்கலைஞர் பாடுவதாக சித்தரிக்காமல், ஒரு பறவை அதுவும் 'குயில்'கானம் இசைப்பதாய் கற்பனை செய்கிறார். இந்த கற்பனைக்கு மேலும் மேலும் சுவாரசியம் சேர்க்கிறார்.

கவிதைக்குத் தரும் உவமையின் தரத்தில் இருந்து கவிஞனின் ஞானம் விளங்கும் என்பதும் கவி மரபின் அளவுகோல். குயில் இசைக்கும் கானம் எவ்வாறு உள்ளதென்ற பிரம்மிப்பை மிக அழகாக 3 உவமைகளில் அடக்குகிறார்.

1. காற்று மண்டலம் எங்கும் தித்திக்கும் அமுதம் கலந்து விட்டது போல
2. மிக வேகமாக மெல்லியதாக இனிமையாக ஊடுருவி எங்கும் பரவக் கூடிய மின்னல் போல
3.தேவ லோகத்தில் உள்ள மிக அழகிய பெண்களான அப்சராஸ் ஒருத்தியோ இந்தக் குயில் போல வடிவம் எடுத்து வந்து தன் குரல் மகிமையை வெளிப்படுத்துகிறது என்று விண்ணக மாதை மண்ணகம் சேர்க்கிறார்.

**அடுத்து , உன்னதமான இசையைக் கேட்போர் நிலை எப்படி இருக்கும் ?**

உடம்பு சிலிர்க்கும், நான் என்ற அகங்காரம் அல்லது உறுதி குறையும், நெஞ்சத்தில் ஆசை நெருப்பு மூண்டிடும். தன்னிலை மறக்கும். பெரும் பரவசம் ஆட்கொள்ளும், நேசம் வளரும், ஒரு போதும் விலகாமல் இருக்கத் தோன்றும். காதல் களி கொண்டு ஆனந்த வாழ்வாகும். இந்த நாத நெருப்பிற்கு நம் ஆவியை அர்ப்பணம் செய்ய மாட்டோமா ? என்று தோன்றும்.

இதனைக் குயில் பாடும் சம்பவத்தினூடே பாரதி எவ்வாறு பொருத்துகிறார் என்று பாப்போம். பெண் குயில் பாடிக் கொண்டு இருக்கிறது, அதைக் கேட்ட அங்குள்ள ஆண் குயில்களின் உடம்பு சிலிர்த்து, உள்ளம் உறுதி குறைந்து , ஆசை பெருகுகிறது. இசை கேட்க, அங்குள்ள பறவைகள் எல்லாம் சூழ்ந்து வந்து விட்டனவாம். தன் காலைக் கடனைக் கூட மறந்து போய் கேட்டு இருந்தனராம். இசை கேட்டால் தன்னிலை மறக்கும் என்பதனைக் கூற இதை விட வேறு செறிந்த ஆனால் எளிதில் புரியவும் கூடிய சொல்லாடலைப் பயன்படுத்த நம் பாரதி அன்றி வேறெவரால் முடியும் ?

*வேடர் வாராத விருந்துத் திருநாளில்,*
*பேடைக் குயிலொன்று*
*பெட்புறவோர் வான்கிளையில்*
*வீற்றிருந்தே, ஆண்குயில்கள்*
*மேனி புளகமுற,*
*ஆற்ற லழிவுபெற, உள்ளத்*
*தனல் பெருக,*
*சோலைப் பறவையெல்லாம்*
*சூழ்ந்து பரவசமாய்க் ...*
*காலைக் கடனிற் கருத்தின்றிக்*
*கேட்டிருக்க,*
*இன்னமுதைக் காற்றினிடை*
*எங்குங் கலந்ததுபோல்,*
*மின்னற் சுவைதான் மெலிதாய்*
*மிகவினிதாய்*
*வந்து பரவுதல்போல், வானத்து*
*மோகினியாள்*
*இந்தவுரு வெய்தித்தான் ஏற்றம்*
*விளங்குதல்போல், ...*
*இன்னிசைப் பாட்டினிலே*
*யானும் பரவசமாய்,*
*மனிதவுரு நீங்கிக் குயிலுருவம்*
*வாரோதோ?*
*இனிதிக் குயிற்பேட்டை என்றும்*
*பிரியாமல்,*
*காதலித்துக் கூடிக் களியுடனே*
*வாழோமோ?*
*நாதக் கனலிலே நம்முயிரைப்*
*போக்கோமோ? ..*

சந்தமும் ஓசை நயமும் இயைந்த இசையாக எவ்வாறு பாடல் அமைய வேண்டும் ? இதனை குயில் பாட்டின் 9 அடிகளின் மூலம் அறிய முனையலாம்.

*நாதம், நாதம், நாதம்;*
*நாதத் தேயோர் நலிவுண் டாயின்,*
*சேதம், சேதம், சேதம்.*

பாடலுக்கு இசையே ஆதாரமானது. ஆதாரமே ஆட்டம் கண்டால் ? சேதம் தானே ? அத்தனை பெரிய அடிப்படை உண்மையை இத்தனை இலகுவாய் 3 சொற்களை மட்டும் உபயோகித்து எப்படித்தான் சொல்ல முடிகிறது?

நல்லதொரு கச்சேரியை கேட்கும் போது உள்ளத்தில் எண்ணற்ற ஆரவாரம் நிகழ்ந்தாலும், கச்சேரி நிறைவுற்ற பின் ஒரே விடயம் தான் தோன்றும். அதுவே அக்கச்சேரியின், அந்த ராஜ இசை வண்டின் வெற்றியும் விருதும் ஆகும். அது என்ன விடயம் ? ஆம், உள்ளும் புறமும் அமைதி நிலவும்.

*மோகனப் பாட்டு*
*முடிவுபெறப் பாரெங்கும்*
*ஏக மவுன மியன்றதுகாண்*

இத்தனை சுகானுபவம் தரும் இசைக் கலைஞனை போற்றுவதற்கு , உலகத்தில் உள்ள செல்ல பெயர்கள் அத்தனையையும் மனம் தேடிக்கொண்டு இருக்கும்.

இசை தந்த குயிலை நோக்கி பாரதி சொன்ன கொஞ்சும் மொழியில் மிஞ்சும் சுவையை காணும் போதெல்லாம் நெஞ்சம் கெஞ்சும். திரவியமே – செல்வமாகத் திகழ்கிறாய்.

பேரின்பப் பாட்டுடையாய் – பெருமகிழ்வை நல்க கூடிய பாட்டு இசைகிறாய். ஏழுலகம் இன்பத் தீ ஏற்றும் திறனுடையாய் – ஏழு

15 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Sari 1
Sari 1
தரமான ஆடைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
ஆடி சேல் அனைத்து ஆடைகளும் சிறப்பு விலையில் 15 முதல் 25 வரை
ஆடி
சிறப்பு விற்பனை
எம்மிடம் தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள் அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760



# மனதுக்கு வயதில்லை



**கவிஞர் வி.கந்தவனம்**
**கனடா**

சந்திர முகத்தில் அழகாக மின்னும் அந்தச் செங்கீறல், கண்டால் களிப்பால் நெளியும்... நிலத்தை நோக்கிக் குளையும்... ஏதாவது கேட்டால் ஒன்றை ஒன்று கவ்வும்... சிரிப்புக் காட்டினால் சற்றே விரியும்... அதிலே முத்துப் பல்வரிசை மெதுவாகத் தெரியும்... ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு நாடகம்... நாடகம் நிசமானபோது கவ்விக் கவ்விச் சுவைத்த போதெல்லாம் அவை சொர்க்கத்தைத் தந்தன... அந்தக் கொவ்வை இதழ்கள் இப்படிக் குறுகிக் கறுத்து மாங்காய் வத்தலாகுமென்று நான் கனவிலும் நினைக்கேல்லை...

சிரிப்பிலைதான் முதலில் மயங்கினேன்... இப்பெல்லாம் இவள் சிரியாமல் இருந்தால் சந்தோசம் என்னும் அளவுக்கு வந்துவிட்டது... வெள்ளைப் பல்வரிசையில் காவி ஏன் வந்ததென்று தெரியாது... ஆனால் ஒறு வாய்கள் விழுந்தது தெரியும்... பல்லைக் கட்டடன் என்றால் இன்னும் இரண்டொன்று விழட்டும் என்று சொல்லிக் கொண்டிருக்குது...

கொழுத்துப் பழுத்துக் குளு குளுத்த தக்காளிக் கன்னங்களைச் சிவக்கச் சிவக்கக் கொஞ்சிக் குலவிய நாட்கள்... நேற்றுப் போலக்கிடக்கு. அதற்குள்ளாகப் பேரப் பிள்ளையள் கீறி விளையாடும் கடதாசியாய்க் கிழிஞ்சு போய்க்கிடக்கு... நான்தான் பழுதாக்கிப் போட்டன் போல...

சிரிச்சாள் எண்டால் இரண்டு கன்னங்களிலும் சின்னக் குழிகள் விழும்... நான் சிலிர்த்துப் போய் நிற்பன். அந்தக் குழிகள் கிள்ளிக் கூடவிளையாட முடியாத அளவுக்குப் பள்ளம்பத்திவிட்டன...

சீராகவும் நேராகவும் நிமிர் ந்து நிற்கும் மூக்கு மட்டும் மிஞ்சிக் கிடக்கு... என்றாலும் அதிலும் ஏதோ சின்னச் சின்ன உண்ணிகள் மாதிரி கறுத்தைப் புள்ளிகள்... பார்க்க முடியேல்ல...

கண்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை... வெட்டிவைத்த தேங்காய்ப் பாதியளவு பெரிய வட்டக் கண்கள்... அந்தமாதிரி வடிவான கண்கள் எனக்குத் தெரிஞ்ச பெண்டுகள் எவருக்கும் இல்லை... உருண்டு மருண்டு அடிக்கடி என்னை வெட்டி விழுத்திய காந்தக் கண்கள்... நிமிர்ந்து நேரே பார்த்தாள் என்றால்... அப்பாடா... என் கண்கள் கூசும். அப்படிப் பார்க்காதே அப்படிப் பார்க்காதே என்று துரத்தித் துரத்தி இவளைக் காதலிச்சதை நினைக்க வாலிப காலம் மீண்டும் வந்தால் நல்லது போல கிடக்கு... அந்தப் பெரிய கண்கள் இப்ப கண்ணாடியைக் கழற்றினால் என்னைத் தெரியாத அளவிற்கு குருடாகிக் கொண்டு....

மார்கழிக் காலத்து மழைமுகிலைப் போல திரண்டு கவிந்து நீண்டு நெளிந்து... நடக்க நடக்க... அசைந்து ஆடி முழங்காலின் பின்பக்கத்தில் தாளம் தட்டும் கூந்தல்... பஞ்சு பத்தி வெள்ளாட்டு வாலைக் குஞ்சு பொரிச்சிருக்கு... நடந்தாள் என்றால்...

இஞ்சாருங்கோ! இஞ்சாருங்கோ! எழும்புங்கோ! எவ்வளவு நேரமாய் உந்தச் சாரமனைக் கட்டிலுக்கை சுருண்டுகிடக்கிறியள். உப்பிடி இந்த வயதுவ காலத்திலை நெடுக ஒரு இடத்திலை இருக்காதையுங்கோ எண்டு எத்தனை நாள் சொல்லியிருக்கிறன். அண்டைக்கு டாக்குத்தருமல்லே சொன்னவர். இரத்த ஓட்டத்திற்கு இடைக்கிடை எழும்பி நடக்கவேணுமப்பா. எழும்புங்கோ... மூஞ்சையும் முகரக்கட்டையும்... எழும்பி முகத்தைக் கழுவிச் சட்டையையும் மாத்திக் கொஞ்சம் கோலம் குறியாய் நில்லுங்கோ... மகளும் மருமோனும் வருகினமாம்...

---

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

உலகங்களிலும் சுக நெருப்பை ஏறக் கூடிய திறமையுடையாய்.

வானத்து புள்ளெல்லாம் மையலுறப் பாடுகிறாய் – ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள் எல்லாம் மோகம் கொள்ளும் படி பாடுகிறாய்

ஞானத்தில் புட்களிலும் நன்கு சிறந்துள்ளாய் – மற்றைய எல்லாப் பறவைகளை விடவும் அறிவில் சிறந்துள்ளாய்

*ஆசைக்குயிலே*
*அரும் பொருளே - கிடைத்தற்கு*
*அரிய செல்வமே*
*தெய்வதமே - என் தெய்வமே.*

பொன்னை நிகர்த்த குரல் பொங்கி வரும் இன்பத்தை தவிர பாட்டு முடியும் வரை பார் அறியேன் விண்ணறியேன், என்னையே அறியேன் என்று சொல்லும் பாரதியின் இசை உணர்வுக்கு மகுடமாய் , இசை தரும் தவிப்புக்கும் தத்தளிப்புக்கும் பிரம்ம தேவனை அழைக்கிறார். பிரம மனே ! ,உன் படைப்பு மிக மிக ஆச்சரிய மானவை. காடு , வானம், கடல் யாவுமே ஆச்சர்யம் ஆனாலும் உன் படைப்புக்களில் பெரும் ஆச்சர்யமானது அமுதம் போன்ற இசை தான். ஐம்பூதங்களும் அதிசயம் . ஆனாலும் ஸ்வரங்களின் சேர்க்கையால் உருவாகும் பாடலின் இனிமைக்கு இணையாகுமா ? ஆசையைத் தூண்டுகின்ற கோடிக்கணக்கான அதிசயங்களை கண்டிருக்கிறோம். அதில் சந்த ஓசை தருகின்ற இன்பம் தான் எதனோடும் ஒப்பிட்டு உவமை சொல்ல முடியாத பேரின்பம் என்று உருகி உணர்ந்து இசைந்து இசையாகி நிற்கிறார் பாரதி.

*பாட்டு முடியும்வரை பாரறியேன், விண்*
*ணறியேன்*
*கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்ற காவ*
*றியேன்!*
*தன்னை யறியேன் தனைப்போல்*
*எருதறியேன்*
*பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரும்*
*இன்பமொன்றே*
*கண்டேன், படைப்புக் கடவுளே!*
*நான் முகனே! .*
*ஆனாலும் நின்றன் அதிசயங்கள்*
*யாவினுமே*
*கானா முதம்படைத்த காட்சிமிக*
*விந்தையடா!*
*காட்டுநெடு வானம், கடலெல்லாம் விந்*
*தையெனில், ...*
*பாட்டினைப்போல் ஆச்சரியம்*
*பாரின்மிசை இல்லையடா!*

*பூதங்க ளொத்துப் புதுமைதரல்*
*விந்தையெனில்*
*நாதங்கள் நேரும் நயத்தினுக்கு*
*நேராமோ?*
*ஆசைதருங் கோடி அதிசயங்கள்*
*கண்டதிலே,*
*ஓசைதரும் இன்பம் உவமையிலா*
*இன்பமன்றோ! ...*

இவ்வுலகம் இனிது, அங்குள்ள உயிர்கள் அனைத்தும் இனியவை , உயிர் அற்றனவும் இனிது என்று படைப்பின் பிரம்மாண்டத்தை வியந்து வியந்து பாடினாலும் ,பிரம்மனின் படைப்பில் ஒப்புயர்வற்ற அதிசயம் இசை என்று கூறும் நம் பாரதியை வியந்து எண்ணிப் பித்தாகி சரண் புகுந்து ஆட்கொள்கிறேன்.








சேவியர்

## நடுப்பக்கம்



# வாழ்க்கை என்பது எதை எல்லாம் சாதித்தேன் என்பது அல்ல

வாழ்க்கை தனது கைகளில் பல்வேறு ஆட்ட முறைகளை வைத்திருக்கிறது. காலத்துக்கு ஒன்றாக அது தனது தன் முன்னால் விளையாட்டுகளை விரிக்கிறது. பால்யம் தனக்கு முன்னால் பல்லாங்குழியை வைக்கிறது. எப்படி ஆடினால் அதிகமாய்ச் சேமிக்க முடியும் எனும் சிந்தனையை அது சொல்லாமல் சொல்லிச் செல்கிறது. தனக்கு அதிகம் கிடைக்க வேண்டும் எனும் சுயநலப் பாடத்தை அது மௌனமாய் தனக்குள் மறைத்து வைத்திருக்கிறது.

பதின்வயது தனக்கு முன்னால் சீட்டுக்கட்டுகளை விரிக்கிறது. கிணற்றடியில், குளக்கரையில், மாமரத்தின் இதமான நிழல்களில் அது சீட்டுக்கட்டுகளின் வாசனையை அறிமுகம் செய்கிறது. வெளிப்படைத் தன்மையில்லாமல் இருக்க வேண்டியதன் அவசியத்தை அது நாசூக்காய் கற்றுத் தருகிறது. தன்னிடம் இருக்கும் சீட்டு என்ன என்பதை சிறு முக அசைவு கூட முன்னறிவித்துவிடக் கூடாது எனும் கவனத்தை அது கற்றுத் தருகிறது. எதைப் போட்டால் வெற்றி பெறலாம், எந்த துருப்புச் சீட்டை கடைசிவரை ஒளித்து வைத்திருக்கலாம் எனும் சூட்சுமத்தை அது சொல்லித் தருகிறது. அடுத்தவனை ஏமாற்றிச்சீட்டுகளைத்தனக்கு சாதகமாய் மாற்றும் சுயநலக் கலையை அது தனக்குள் ஒளித்து வைத்திருக்கிறது.

இளவயது தனக்கு முன்னால் சதுரங்கப் பலகையை நீட்டுகிறது. யாரை வெட்டலாம், யாரைத் தாண்டலாம், யார் வலையில் சிக்காமல் போகலாம் எனும் களப் பயிற்சியை அது தருகிறது. எப்போது எவனை வெட்டலாம் எனும் கண்ணியின் கவனிப்போடு அது பயணிக்கிறது. வெட்டுவதும், வீழ்த்துவதுமே வெற்றி எனும் போதனையை அது கற்றுத் தருகிறது. இலக்கானது அடுத்தவனின் தலையை வீழுத்துவது எனும் இலட்சியமே உள்ளுக்குள் உறைகிறது.

நடுவயது தனக்கு முன்னால் தாயக்கட்டைகளை உருட்டுகிறது. அங்கே அனுபவத்தின் வெளிச்சம் வீசுகிறது. ஆனாலும் சபைகளின் நடுவினிலே தனக்கான லாபங்களே கணக்கிடப்படுகின்றன. பிறரின் அவமானங்களை விட, தனக்கான வெகுமானங்களையே தாயக்கட்டைகள் உருண்டு புரண்டு புரிய வைக்கின்றன.



முதிர் வயது தனக்கு முன்னால் தன்னையே ஒரு விளையாட்டுப் பொருளாய் விரிக்கிறது. அங்கே விளையாடுவதற்கு ஆட்கள் இல்லை. அவரவர் கற்றுக் கொண்ட சுயநலத்தின் பாதைகளில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். திடீரென முதுமை விழித்துக் கொள்கிறது. தான் விளையாடியவை எல்லாம் வினையாகிப் போனதை உணர்கிறது.

காலச்சக்கரம் மீண்டும் தன்னை பால்யத்தில் கொண்டு போனால், விளையாட்டுகளை அல்ல விளையாடியவர்களை அரவணைக்க வேண்டும் ! களங்களை அல்ல, களமாடியவர்களை நேசிக்க வேண்டும் !! விளையாட்டின் வெற்றியை அல்ல, விளையாடிய நேரத்தின் அன்னியோன்யத்தை ரசிக்க வேண்டும். என தனக்குள் நிறைவேறாக் கற்பனையை வளர்க்கின்றன.

நிறைவேறாத தனது ஆதங்கங்களை தனது அடுத்தடுத்த தலைமுறைக்கு அறிவுரைகளாக அன்புடன் அள்ளித் தெளிக்கின்றன. ஆனால் அடுத்த தலைமுறையோ தனக்கான வெற்றி விளையாட்டுகளில் தீவிரமாய் ஈடுபடுகின்றன.

நீரற்ற குளத்துப் பறவைகள் போலே, காலம் தனது உறவுகளின் சிறகுகளை காடுகளுக்கு அழைத்துச் செல்கிறது. காடுகளோ ஒற்றையடிப் பாதைகளைப் போன்றவை. எந்த அமானுஷ்யத்தையும்

17 ஆம் பக்கம் பார்க்க...




தனக்குள் இழுத்துக் கொண்டு மௌனமாய் உறங்கும் மகோன்னதம் அதற்கு உண்டு.

நீரற்ற குளத்தில் பறவைகளைப் போல, இன்றைக்கு உறவுகளும் நட்புகளும் காலத்தின் கழுத்துகளைப் பிடித்துக் கொண்டு சீறிப் பாய்கின்றன. இந்தப் பறவைகளுக்கு கொஞ்சம் கூட ஈவு இரக்கமே இல்லையா ? ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்கலாமா, அருந்தக் கொடுத்த குளத்தை அவமதிக்கலாமா என தார்மீகக் கோபம் கொள்ளும் முன் ஒரே ஒரு கேள்வியை நாம் கேட்க வேண்டும்.



ஏன் குளம் நீரற்றதாய்ப் போனது ?

இந்தக் குளத்தைத் தூர் வாராத குற்றம் யாருக்கு இருக்கிறது ?

குளத்தைக் கவனிக்காமல், நீரிருக்கிறதா எனும் பிரக்ஞையற்று ஏன் நாம் வாழ்க்கையைக் கழித்தோம் ?

நீரில்லாக் குளத்தில் பறவைகள் என்ன செய்யும் ? வேரில்லா மரத்தின் பூக்கள் எத்தனை காலம் தான் வாசம் வீச முடியும் ?

எனவே, முதலில் நாம் குளங்களைக் கவனிப்போம். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த நமது பழைய கால வாழ்க்கை அற்புதமானது. ஒருவர் சுமைகளை ஒருவர் தாங்கி, ஒருவர் குறைகளை ஒருவர் ஏற்று வாழ்ந்த காலம் அது. அவமானமும், சண்டையும் நடந்தால் கூட வாழ்வின் இறுதி மூச்சுவரை உறவுகளோடே ஒன்றித்துக் கிடந்த காலம் அது. ஐயா தானே சொன்னாங்க என எந்த ஒரு மிகப்பெரிய சண்டையையும் ஏற்றுக் கொள்ளும் மன வலிமை அன்று இருந்தது. ஒருவர் மனமுடைந்து போனால், மற்ற பறவைகளெல்லாம் வந்து தங்களுடைய சிறகுகளால் அந்த உடைந்த மனதை ஒன்று சேர்த்தன.

அப்போது குளங்கள், வளங்களோடு இருந்தன. பறவைகள் பரவசத்தோடு இருந்தன.

காலம் குடும்பங்களை சின்னச் சின்ன துண்டுகளாக உடைத்தது. கூட்டுக் குடும்பம் ஒற்றைக் குடும்பமாகவோ, ஒன்றரை குடும்பமாகவோ உருமாறிப் போனது. வெட்டி ஒட்டும் புகைப்படப் புதிர் போல வாழ்க்கை தனது முழுமையை இழந்து துண்டுகளோடு துவண்டது. தன்னிடம் இருக்கும் துண்டுப் படமே முழுமையான படம். அதைத் தாண்டிய படம் இல்லை என்றும், அது தேவையில்லை என்றும் குடும்பங்கள் கருதிக் கொண்டன. ஒரு சின்னச் சண்டை வந்தால் கூட அதிலிருந்து மீண்டு வருவதற்கான காலம் நீளமாகிப் போனது. கிடைக்கின்ற காயம் ஆழமாகிப் போனது. ஒட்டாத புகைப்படப் புதிரின் துண்டுகள் ஒன்றோடொன்று வழக்காடத் துவங்கின. அவன் எப்படி என்னைப் பாத்து சொல்லலாம் எனும் ஈகோவை மனம் தன்மேல் சூடிக்கொண்டது. ஈகோ, வலிமையற்ற மனதின் உதாரணம். ஈகோ தன்னம்பிக்கை குலைந்தவனின் அடையாளம். ஈகோ, சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலற்றவனின் துணைவன்.

அப்போது குளங்கள், சிறு குட்டைகளாகச் சுருங்கின. அவ்வப்போது பறவைகள் வந்து பார்த்துவிட்டுப் போயின. காலம் அத்துடன் தனது விளையாட்டை நிறுத்தவில்லை. ஏற்கனவே துண்டான குடும்பங்களையும் துண்டாடியது. கானகங்கள் தோப்புகளாகி, தோப்புகள் தனிமரங்களாக்கியது. பிற குடும்பங்களுக்கான தற்காலிகத் தஞ்சமாகக் கூட அவை இருக்கவில்லை. இங்கே தவறுதலாய் விழுகின்ற வார்த்தைகள் கூட தற்கொலைக்குத் தூண்டுகின்றன. வாய்தவறி விழுகின்ற வார்த்தைகள் கூட விவாகரத்தில் போய் முடிகின்றன. அடைக்கலச் சிறகுகள் இல்லாத பறவைக்குஞ்சுகள் பரிதவிக்கின்றன. தான் பார்க்கும் வாழ்க்கையே முழுமையானது எனும் கற்பனையுடன் மழலைகள் தவழ்கின்றன. தொட்டிச் செடிகளே கானகமெனும் புரிதலுடன் அவை வாழ்வுக்குள் புறப்படுகின்ரன.

இப்போது குளங்கள், மண்ணை விட்டு கண்ணுக்கு இடம் மாறி இருக்கிறது !

நீரற்ற குளத்துப் பறவைகளைப் போல வாழ்க்கை ஆனதன் காரணம் மிக எளிமையானது. எப்படி ஒரு சின்ன கோணம் தவறினால் கடல் பயணம் கடைசியில் வேறோர் எல்லையில் நம்மைக் கொண்டு போய் சேர்க்குமோ, எப்படி அடித்தளத்தில் நேர்கின்ற ஒரு பிழை ஒட்டு மொத்த கட்டிடத்தையும் குலைத்து விடுமோ அப்படித் தான் ஆகிவிட்டது. நமது பார்வை குளத்தை மேன்மைப்படுத்துவதில் இருந்திருக்க வேண்டும். பறவைகளின் உள்ளத்தை நிம்மதிப் படுத்துவதாக இருந்திருக்க வேண்டும். கடலுக்குக் கூட வேலி போட்டு சொந்தம் கொண்டாடும் மனநிலையே இருக்கின்ற இன்பங்கள் களவு போகக் காரணம்.

உறவுகளின்றி கட்டப்படும் வாழ்க்கையானது கடைசியில் சிறகுகளின்றி துக்கப்படும். குளம் தன்னையே தூர்வார முடியாது. குளம் தன்னையே நிரப்பிக் கொள்ள முடியாது. குளம் தன்னையே பாதுகாத்துக் கொள்ள முடியாது. அதற்கு பறவைகளின் பரிவு அவசியம்.



நமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் அன்பைப் பகிர்பவர்களாக இருக்க வேண்டும். வெறுப்புகளின் முனைகளைக் கூட அன்பின் இழைகளால் உடைத்து விட முடியும். முள்ளை முள்ளால் எடுப்பதல்ல புத்திசாலித்தனம், முள்ளை பூவால் பிடுங்குவதே இல் வாழ்க்கையின் மகத்துவம்.



விட்டுக் கொடுத்தவன் என்றும் கெட்டுப் போனதில்லை என என் பாட்டி அடிக்கடி சொல்வார்கள். பழமொழிகள் நமது வாழ்க்கையை புதுசாக்கிக் கொண்டே தன்னைப் பழசாக்கிக் கொள்பவை. எதற்காக எதை விட்டுக் கொடுப்பது என்பதில் தெளிவு வேண்டும். அன்புக்காக செல்வத்தை விட்டுக் கொடுக்கலாம். உறவுக்காக பெருமையை விட்டுக் கொடுக்கலாம். நட்புக்காக ஈகோவை விட்டுக் கொடுக்கலாம். குடும்பத்துக்காக சுய விருப்பங்களை விட்டுக் கொடுக்கலாம். என பல விட்டுக் கொடுத்தல்கள் நம்மை வாழ்வின் உயரத்துக்கு இட்டுச் செல்ல முடியும்.

நீரற்ற குளத்துப் பறவைகள் போல வாழவேண்டியவர்கள் அல்ல நாம். நீரூற்றின் பறவைகளைப் போல சிறகு சிலிர்க்க வேண்டியவர்கள். காலம் இப்போதும் கடந்து விடவில்லை. காரணம், எல்லோருக்குள்ளும் நமது பால்யத்தின் குளம் உறைந்து கிடக்கிறது. நமது நினைவுகளின் பரண்களில் பழைய காலத்தின் நீரூற்றுகள் புழுதி படிந்து கிடக்கின்றன. இன்றே அதை தூர் வாருவோம்.

ஒவ்வொருவரும் நமது அன்பினை துலக்கும் போது, தம் குளத்தினை கண்டுபிடிக்கும் போது, பறவைகள் சிறகுவிரிக்கும். குளத்தைத் தேடி வரும் பறவைகள் போல உறவுகள் மீண்டும் இனிமையின் படிக்கட்டில் வந்தமரும். நினைவில் கொள்வோம். வாழ்க்கை என்பது எதையெல்லாம் சாதித்தேன் என்பதல்ல, எல்லோருடைய இதயத்தையும் சந்தித்தேனா என்பதில் தான் அளவிடப்படுகிறது. செல்வம் நம்மை மதில் கட்டிப் பிரிக்கும், அன்பே நம்மை பாலம் கட்டி இணைக்கும்.

**அன்பின்றி அமையாது உலகு !**
**அன்பற்ற எதையுமே விலக்கு !**







# சமூக சேவகி வலன்ரீனா இளங்கோவன்!



மு.க.சு.சிவகுமாரன்

நாம் நாளை சொல்வோம் நாளை எழுதுவோம் என்று நாம் பலரது சிறப்பபைச் சொல்ல காலத்தை தள்ளிப் போடுகிறோம். இப்படியே தள்ளிப்போனால் என் வாழ்வில் நான் சந்தித்த உண்மையான சேவையாளர் பலரை எழுத எனக்கு இருக்கும் காலம் நேரம் போதாது போய்விடும். ஒரு தந்தையின் உணர்வோடு திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்களின் சேவையை அவர்களின் ஆற்றலை பகிர்கின்றேன்.

வலன்ரீனா, இளங்கோவன் (1971. 01.08) யாழ்ப்பாணத்தில் குரும்பசிட்டியில் பிறந்த எழுத்தாளர். இவரது தந்தை வயாவிளான் மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும் யாழ் தினக்குரல் பத்திரிகையின் பொது முகாமையாளர் கருணைப்பாலம் ஸ்தாபகருமான ஆ.சி.நடராஜா அவர்களின் மூத்த புதல்வியாவார். தாய் பெயர் பரமேஸ்வரி. வலன்ரீனா ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் உயர்நிலைக் கல்வியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் கற்றார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியாவார். தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோவையும் யாழ் பல்கலைக்கழத்தில் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் யாழ் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரீகத்தில் முதுதத்துவமாணி பட்டத்தையும் முடித்துள்ளார்.

அத்தோடு வட இலங்கை சங்கீதசபை பரதநாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு ஆகிய பரீட்சைகளில் தரம் 4, 3 தரச் சித்தி. பல பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றியுள்ள இவர் யுத்தம் காரணமாக பல வருடங்களின் பின்னர் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டுள்ள இவரின் சொந்த இடமான குரும்பசிட்டிக்கு தனது சொந்த விருப்பத்தின் பேரில் இடமாற்றம் பெற்று ஆரம்ப வகுப்புக்களை மட்டும் கொண்ட யா°குரும்பசிட்டி பொன்பரமானந்தா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கிறார். எழுத்துத்துறை சார்ந்து கவிதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் கொண்டுள்ளவர் வலன்ரீனா.

இவரின் ஆக்கங்கள் வெற்றிமணி, வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகிய நாளிதழ்களில் வெளிவந்துள்ளன. அபிநயா கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் வெற்றிமணி இலங்கை நாளிதழின் பிரதம ஆசிரியராகவும் சிவத்தமிழ் சஞ்சிகையின் யாழ்ப்பாண இணைப்பாளராகவும் உள்ளார். ஐயை உலகத்தமிழ் மகளிர் குழுமம் இலங்கைக்குழுமம் ஒருங்கிணைப்பாளர், தமிழர் மரபு அறக்கட்டளை இலங்கை பொறுப்பாளர்களில் ஒருவர், குரும்பசிட்டி நலிவுற்றோர் நலநோம்பு நிலையச் செயலாளர், ஏ.எஸ்.என் கல்வி நிலைய இயக்குனர், ஏ.எஸ்.என் கல்விநிலைய மாணவர் சமூகசேவைக்கழகம் தோற்றுனர், பொறுப்பாசிரியர், ஏ.எஸ்.என் நுண்கலைத் துறைப் பொறுப்பாசிரியர், ஆ.சி.நடராஜா நுண்கலைமன்ற தோற்றுனர், திருமறைக்கலாமன்றம், கலைத்தூது அழகியற் கல்லூரியின் ஆலோசனைக் குழு உறுப்பினர் என பல சமூக அமைப்புக்களில் இணைந்து சமூக சேவைகளை மேற்கொண்டு வருகிறார் வலன்ரீனா.





ஆ.சி.நடராஜா



யாழ்ப்பாண நாட்டிய மரபுகள், இந்துநாகரீகம், பரமானந்தம், கலைமகன், ஆனந்தச்சுடர் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். மதுரை அரசாளும் மீனாட்சி, கலைச்சங்கமம், சங்கமம் ஆகிய இறுவெட்டுக்களையும் வெளியிட்டுள்ளதோடு, சைவசித்தாந்த நோக்கில் சிவநடனம், யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற்கலைகளில் சின்னமேள ஆடற்கலை, யாழ்ப்பாணத்து பெண் ஆடற்கலைஞர்கள் ஆகிய தலைப்பிலான நூல்கள் வெளிவரவுள்ளன. ஊடகங்கள் தமிழ் மொழியை வளர்க்கின்றனவா? என்ற தலைப்பில் 2012ஆம் ஆண்டு உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு ஆய்வுக் கட்டுரை, சமர்ப்பிக்கப்பட்டது. ஐயை உலகத் தமிழ் பெண்கள் மாநாடு 2018 ஆம் ஆண்டு மலேஷியாவில் நடைபெற்றபோது ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் இடம்பெற்ற சின்னமேள ஆடற்கலை மரபு ஓர் பெண்ணிய நோக்கு, உலகத் தமிழ் பெண்கள் மாநாடு 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது ஈழப் போரில் பாதிக்கப்பட் பெண்களும், கருணைப்பால உதவித்திட்டமும் என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இன்று இவ்வளவு சிறப்புற்று இருக்கும் வலன்ரீனா இளங்கோவன் அவர்களை நான் 2002 இல் சந்தித்தேன்.

யாழ் வெற்றிமணி 2005 ஆண்டு மீண்டும் தயாகத்தில் மாணவர் இழதழாக ஒலித்தது. வலன்ரீனா இளங்கோவன் துணை ஆசிரியராக இருந்தார். அதற்கு பெரும் துணையாக அவரது கணவன் இளங்கோவன் இருந்தார்.

வெற்றிமணி 2008 ஆண்டு யேர்மனியில் இடம் பெற்ற வெற்றிமணி விழாவிற்கு சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பொறியிலாளர் சி.தயாபரன் அவர்களும் யாழ் வெற்றிமணி பத்திரிகை உதவி ஆசிரியாரும்

27 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அழகுக்கும் கவர்ச்சிக்கும் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?



Dr.நிரோஷன் தில்லைநாதன்

நண்பர்களே, இதை ஒரு முறை கற்பனை பண்ணிப் பாருங்கள் பார்ப்போம். அழகான இலையுதிர் காலத்தில், மாலை இளவெயில் நேரத்தில், நீங்கள் வீதியில் நடந்து போகும் பொழுது திடீரென்று பார்த்தால் ஒரு மிகவும் அழகான பெண்ணை ஃஆணை பார்க்கின்றீர்கள். பார்த்த உடனே வியந்து, உங்களை மறந்துவிடுகின்றீர்கள். என்ன நண்பர்களே? இது என்னடா கஜினி படப் பாடலை எடுத்து விடுகின்றேன் என்று யோசிக்கின்றீர்களா?

இல்லை இப்படி ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் எல்லோருமே அனுபவித்து இருப்பீர்கள், சரி தானே? நீங்கள் ஆணாக இருந்தால் ஒரு அழகிய பெண்ணைப் பார்த்தோ அல்லது ஒரு பெண்ணாக இருந்தால் ஒரு ஆணைப் பார்த்தோ வியந்திருப்பீர்கள்.

ஆனால் இதில் ஒரு விஷயத்தை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? அது என்னவென்றால், ஏன் நமக்கு ஒரு சிலரைப் பார்த்தால் மட்டும் தான் அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிகின்றது, ஆனால் வேறு சிலரைப் பார்த்தால் அப்படித் தெரிவதில்லை. இதிலும் ஆச்சரியம் என்னவென்றால், எனக்கு அழகு அல்லது கவர்ச்சியென்று தெரிபவர் உங்களுக்கு அழகாக்கத் தெரியவேண்டும் என்று அவசியமே கிடையாது. எனவே இதற்குக் காரணம் என்ன? இந்தச் சுவாரசியமான கேள்விக்குப் பதில் தெரியவேண்டும் என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

ஏன் ஒரு குறிப்பிட்ட சிலரை மட்டும் எங்களுக்கு அழகாகவும், கவர்ச்சியாகவும் தெரிகின்றது? ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான இசை மற்றும் பாடல்களைப் பிடிப்பது போல் தான் இதுவும். உதாரணத்திற்கு எனக்கு ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம், அதாவது கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வா என்று ஆரம்பிக்கும் அந்தப் பாடல் பிடிக்கும் என்கிற காரணத்தால் உங்களுக்கும் அது பிடிக்க வேண்டுமென்று அர்த்தம் இல்லை தானே? அதே போல் தான் எனக்கு அழகு என்று தோன்றும் பெண் உங்களுக்கும் அழகாக இருக்கத் தேவையில்லை. ஆனால் இதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், கவர்ச்சி என்பது உடல் அழகை மட்டும் குறிப்பது இல்லை, அதற்கும் மேலிருக்கிறது. அதைப் பற்றி இன்னும் ஒரு கொஞ்ச நேரத்தில் பார்ப்போம்.



நாம் நமது மரபணுக்களை, அதாவது Genes ஐ அடுத்த தலைமுறைக்குக் கொடுப்பது என்பது நாம் நமது வாழ்வில் செய்யும் ஒரு மிக முக்கியமான செயல்களில் ஒன்றாகும். இதைச் செய்வதற்கு ஏற்ற துணையைத் தேர்ந்தெடுக்கப் பல வழிகள் உள்ளன. உதாரணமாக ஒரு மயிலை எடுத்துக் கொள்வோம். ஆண் மயிலின் தோகை, வண்ணங்கள், அழகு மற்றும் அவை மிளிரும் தன்மையினைப் பொறுத்து பெண் மயில் கவரப்பட்டு தனக்கான ஆண் மயிலைத் தேர்ந்தெடுக்கும். அது ஏனென்றால் இவையெல்லாம் சரியாக இருந்தால் தான் அந்த ஆண் மயில் நன்றாக வளம்பெற்ற மரபணுக்களையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொண்டிருக்கும். எனவே இவையனைத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கலாம். இதுவே மனிதர்களை எடுத்துக்கொண்டால், நாம் ஏதோ அழகு மற்றும் கவர்ச்சி தான் இனச்சேர்க்கையில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அவை நமது உடலின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்கத் தன்மையை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டும் ஒரு வகையான மொழி மட்டும் தான். வேறொன்றுமே இல்லை.

சரி சரி இது எல்லாமே ஒரு பக்கம் இருக்கட்டும், எனக்கு ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதிலைச் சொல்லிவிடுங்கள். உங்களுக்கு ஒருவரைப் பார்க்கும் போது, அவர் ஏன் அழகாகத் தெரிகிறார்? அட, அவளின் கண்களைப் பிடிக்கின்றதா, அல்லது அவனின் முகம் பிடிக்கின்றதா? நண்பர்களே, உங்களுக்கு ஒன்று தெரியுமா? இதைப் பார்த்துத் தான் நாம் மயங்கிவிடுகின்றோம் என்று நினைக்காதீர்கள். உண்மையில் நமக்கு ஒரு மனிதனைப் பார்த்து அழகு என்று எப்போது சொல்கிறோம் தெரியுமா? அந்த மனிதனின் முகத்தை மற்றும் உடலை செங்குத்து வாக்கில் சரிபாதியாகப் பிரித்துப் பார்க்கும் போது, இருபுறமும் ஒரே மாதிரியாக இருந்தால் அந்த மனிதன் கவர்ச்சியானவராகத் தெரிவார். இதை ஆங்கிலத்தில் Bilateral symmetry என்று அழைப்பார்கள்.

இதைத் தவிர்த்து வயிற்றிற்கும், இடுப்பிற்குமான விகிதம் அதாவது சயவழை குறைவாக இருந்தாலும் அந்த மனிதன் நமக்குக் கவர்ச்சியாகத் தெரிவார். நமது உடலில் கொழுப்பு எந்தப் பகுதிகளில் சேர்க்கப்படுகின்றது என்பதை ஆண்களுக்கு ஆண்மையியக்குநீர் ஆகிய Testosterone மற்றும் பெண்களுக்குப் பெண் பாலின இயக்குநீர் ஆகிய Estrogene நியமிக்கின்றது. உதாரணத்திற்குச் சரியான அளவில் estrogene சுரக்கும் பெண்களின் வயிற்றடியின் அளவு, இடுப்பின் அளவின் 70 வீதமாக இருக்கும். அதே போல் தான் ஆண்களுக்கும் பொருந்தும். இதில் உள்ள சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இந்த விகிதத்தில் இருக்கும் வயிறு மற்றும் இடுப்பின் அளவு உள்ளவர்களுக்கு இதயத்தோடு



சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோய்க்கான வாய்ப்புகள் குறைவாக இருக்குமாம்.

சரி, ஒருவரைப் பார்க்கும் போது இதெல்லாமே சரியாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்வோம். அப்படி இருந்தும் அவரைப் பார்க்கும் போது உங்களுக்குக் கவர்ச்சியாகவோ அழகாகவோ தெரியவில்லை என்றால் என்ன காரணமாக இருக்கலாம்? இதற்கு pheromones எனும் வேதியியல் பொருளே காரணமாகும். இந்த pheromones நம்முள் சுரக்கும் மணமுடைய வேதிப்பொருள் ஆகும். தெளிவாகக் கூறவேண்டுமென்றால்

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுகள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
தஞ்சாவூர் வெள்ளை
பொன்னி புழுங்கல் அரிசி
THANJAVUR WHITE PONNI BOILED RICE
Laila
Basmati Rice
BASMATI RICE
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# The Secret of Subtle Body



In the Yogic, Tantric and other systems of Hinduism, Vajrayana Buddhism, as well as Chinese Taoist Philosophy, the subtle body constitutes a human existence. It is also known by the Sanskrit name, Sukshma sharira, and is sometimes called the astral body (linga sharira). In the Bhagavad Gita, the subtle body is described as a combination of the mind, the intellect and the ego, and it is the subtle body that controls the physical body. The physical body is sheathed by three sheaths of the subtle body:pranamaya kosha (vital layer related to hunger, thirst, hot and cold), manomaya kosha (mental layer related to delusion, thinking, doubt, anger and depression) and vinjaanamaya kosha (intellectual layer related to ego and decision-making). Through the subtle body, the yogi can experience the pleasure and pain. Below is the vivid description of these three sheaths.

**1.The Pranamaya kosha/energy sheath has a subtle physiology of its own, which employs the following aspects:***

*subtle energy functions (vayus or pranas),
*subtle energy currents (nadis),
*subtle energy centers (chakras),
*subtle elements (tattvas),
*subtle perceptive and motor senses (tanmatras),
*subtle breath flow patterns (svaras),
*subtle energy points (varma pulligal), and
*subtle brain centers (dalas).

**2. The manomaya kosha/ mental sheath is made up of the following functions:**

*the sensory/motor thinking mind (manas),
*the personal, ego, or sense of I-ness (ahangaram), and
*the storehouse of past impressions and patterns (chitta).

**3. The vinjaanamaya kosha / judgment sheath is capable of directing awareness outwardly through mind or inwardly to the divine. It is called buddhi.**

*It has superior ability to differentiate what is truly good and helpful for our inner development from that which is distracting and dangerous.
*It can convey Divine wisdom to the lower mind.



The western medicine is utilized to cure diseases in the physical body whereas thousands of years ago our ancestors were able to cure, heal and operate on the human body with mantras and herbs. Instead of dealing with physical body alone they healed the subtle body which brought immediate and permanent healing to the illness. They possessed wide and deep knowledge in all the healing methods by learning under a spiritual teacher who obtained the knowledge from long practice in the same to find each and every detail of it to lead a good and long healthy life. Rishis and saints found that the mind has superpowers such as controlling the breathe, heartbeat, stay underneath the earth without food water and air. All these indicate that beyond the physical body there are other sheathes and the mind and the subtle body can leave the physical body and enter into another body and travel according its wish.



**Bavvatharani R**
**Nallur**

Our body is connected with the galaxy's superpower. Hindus know that how the energy of the physical substance work. They found that energy comes from the space and one person can change their body movements body reaction through the mind which has the power to control the body ,and develop powers to control the others minds and even the five elements such as water, air, fire, space and earth. Man can thus move an manipulate and materialise objects the power of mind which can be called as psychic energy. This energy is hidden in every human and some humans have shown rare skills. The science now believes this power. A person's mind thread is linked with the Galaxy.

The ancient saints and yogis found and experienced inner harmony by controlling the mind through meditation. Meditation is the basic practice to attain balance within our physical, mental and emotional bodies. Keeping ourselves in balance should be a priority, but it can be a very tough task without Meditation. There are plenty of ways such as doing yoga with proper breathing exercises, using crystals to heal and energize, taking timely actions, doing colour therapy, practicing water therapy, following magnet therapy and reiki we can easily obtain healthy mind physic and obtain balance of mind.

The science and technology which have reached their highest levels in research and innovation should examine the truth behind the psychic power hidden in the ancient holy books and quotes said by great saints and should say the truth and facts to the world.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கறுப்பின மக்களின் வாழ்க்கை எமக்கும் முக்கியம்

## கறுப்பன் கறுப்பி என்றே நாம் சொல்வோம் கறுப்பின மக்கள் என்று சொல்வதில்லையே!

கடந்த சில கிழமைகளில் சமூக வலைகளில் பல தமிழ் இளைஞர்கள் என்னை நாடினர். Black Lives Matter என்ற தற்போது மிக விஞ்சிய போராட்டத்தை பற்றி வீட்டிலோ, தமிழ்ச்சமூகங்களிலோ பேசும்போது, எதிர்ப்பைச் சந்தித்ததாக சொல்லி இருந்தனர்.

எங்களுக்கே எத்தனை பிரச்சனைகள் இருக்க, நாங்கள் ஏன் அடுத்தவன் பிரச்சனைக்கு போவான்? எனச் சிலர் சொல்ல, சிலரோ தமிழீழப்போராட்டத்தைப் பின் தள்ள வந்த சதி தான் இது! எனச் சொல்லி உள்ளனர். சரி, கேள்வியை எழுப்புவோம், நாம் ஏன் கறுப்பு மக்களின் உயிர்கள் முக்கியம் எனப் போராடவேண்டும்?

முதலில் பிளைக் லைவ்ஸ் மேற்றர் [Black Lives Matter] என்றால் என்ன எனப் பார்க்கலாம். கறுப்பு மக்களின் அமைப்பு ரீதியான இனவாதத்தை எதிர்த்துப் போராடும் முன்னீடு இது. போலிசாரின் வன்முறையால் இழந்த கறுப்பு மக்களின் உயிர்களுக்கு நியாயம் கோரும் திட்டம். கறுப்பு மக்கள் [ஐரோப்பாவிலும் கூட] பொலிசார் விசாரணைகளுக்குள் அகப்பட்டால் அளவுக்கு மிஞ்சிய கொடூர வன்முறைகளைச் சந்திக்கின்றனர். காரணமின்றி அடித்தோ,

சுடப்பட்டோ இறக்கின்றனர். இவர்கள் உயிரழப்பிற்கு காரணமான அதிகாரிகளிற்கு எந்தவித தண்டனைகளும் கிடைப்பதில்லை. இதனால் கறுப்பின மக்களின் உயிர்கள் முக்கியமின்றிப் போகின்றன. இப் போராட்டம் George Floyd இறந்ததும் தொடங்கியதல்ல, 2013ம் ஆண்டு 17வயது சிறுவன் Trayvon Martin கொடூரக்கொலை செய்த பொலிஸ் அதிகாரிக்கு அமெரிக்க அரசாங்கம் தண்டனை விதிக்காததால் தொடங்கியது. கறுப்பு மக்களை வெள்ளை மக்களுடன் ஒப்பிட்டால் நீதிக்கு மாறான வகையிலே மட்டுமே தண்டனைகளை அனுபவிக்கின்றனர்.

தமிழ் மக்கள் எங்களிடையே இனப்பாரபட்சங்கள் பல உள்ளன. கறுப்பு மக்களுக்கு எதிராக எங்கள் மனங்களில் கருத்துகளும், பேச்சுவார்த்தைகளில் சொற்களும் உள்ளன. கறுப்பின மக்கள் என்று சொல்லாமல், கறுப்பன், கறுப்பி என்று சொல்லுவது அவர்களிளிடயே உள்ள மனிதத்தை பறித்து தரக்குறைப்புச் செய்கிறது. இப்படி எம்மைத் தரம் கூட்டி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இந்த தப்புக்கணக்கை ஆதரிக்க வெள்ளை மேலாதிக்க சமுதாயமும் எங்களை Model Minority யாக நிலைப்படுத்து கிறது.





ராம்.பரமானந்தன்

தங்களுக்கு வழங்கிய வேலை யை குறையிலாது செய்து, தங்களுக்கு வகுக்கப்பட்ட இடங்களில் இவர்கள் இருப்பதால் குழப்பமில்லாத இனங்களை Model Minority என்பர். கறுப்பு மக்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தங்களது சம உரிமைகளுக்கு போராடுவதால் அவர்களுடைய போராட்டம் எந்தளவு மூடிமறைக்க முயற்சிக்கப்படுகிறதோ, அதே அளவு படர்ந்து தொடர்கிறது. எந்தக் கறுப்பின மனிதரை நினைத்தாலும் அடக்குமுறையின் வரலாறு எதிரொலிக்கிறது. இதனால் நான் தமிழ்ழிழப் போராட்டம் தரம் குறைந்தது, பின்வாங்க வேண்டியது எனச் சொல்ல வில்லை. எவ்வளவு வரலாற்றுக்கணக்கான அடக்குமுறைகளின் ஒற்றுமைகள் இருந்தாலும், இருதரப்பினர் வரலாறும் ஒன்றல்ல. எங்கள் வரலாற்றிக்கோ, அவர்கள் வரலாற்றிற்கோ கனதி; கூட என அவற்றை போட்டியிட வைப்பதோ, ஒன்றெனச் சொல்வதோ, நியாயமாகாது என்பதே நான் சொல்வது. புற்று நோயாளியிடம் சென்று, AIDS வியாதியும் உள்ளது தானே, இதில் எது தரம் கூடியது என்று கேட்போமா?



**நாம் ஏன் கறுப்பு மக்களின் குரல்களை ஆதரிக்க வேண்டும்?**

கறுப்பு மக்களின் செலவிலேயே நாம் பலமுறைகளிள் வாழ்ந்து வருகிறோம். ஒவ்வொரு தமிழ்க்கடைகளிலும் கணிசமான எண்ணிக்கையில் கறுப்பின வாடிக்கையாளர்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர். அவர்களுடைய மரக்கறி, சிகை அலங்காரப்பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் என பலவித கலாச்சாரப் பண்டங்களை விற்று எமது பொருளாதரத்தைப் பாதுகாக் கிறோம். ஈழத்தமிழ் மக்கள் மாத்திரம் கொள்வனவு செய்யும் தமிழ்க்கடைகள் நிலைத்திருக்குமா? ஆகவே எமக்கு தமிழ்க்கடைகள் இருப்பதற்கு, அவர்களும் ஒரு முக்கிய காரணம்.

எமது இரண்டாம் தலைமுறையினர் விரும்பிக் கேட்க்கும் Hip-Hop இசை கூட கறுப்பு மக்களினது தான். Hip-Hop என்பது அடக்கப்பட்டவர்களின் இசை என இருக்க, எம்மினத்தவரும் அதைத் தத்தமது ஆக்கிக்கொண்டனர். இருந்தாலும் அடக்கப்பட்ட கறுப்பினத்திடம் தான் அதுவும் அதன் நாகரீகமும் முதலில் தோன்றின. நாங்கள் Hip-Hop நாகரீகத்தின் படி தொப்பியை அணிந்து, அகலாமான அந்தக் கால்ச்சட்டைகளை அணிந்த வண்ணம், புருவத்தில் கோடுகளையும் முடி வெட்டில் பின்னல்களையும் அணிவது கறுப்பினக் கலா சாரத்தை பின்பற்றுவதே. அவர்கள் செலவிலும், கலாசாரத்திலும் வாழ்ந்த வண்ணம், அவர்கள் குரல்களுக்கு காதுகொடுக்காது போவது, அடக்கிவைக்கும் வெள்ளையினத்தில் இருந்து எம்மை அது ஒருபோதும் வேறுபடுத்தாது.

கறுப்பின உயிர்கள் முக்கியமே இன்றும் என்றும் தமிழருக்கு முக்கியமே.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# திருமந்திரப் பாடல்களில் பரிபாசை மறைபொருள் கூற்று (1)

51

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

பொதுவாக சித்தர்கள் தங்கள் பாடல்களில் மறைவாக உண்மை நிலையை விளக்கும் சொற்களின் மறைபொருளை அறிந்தால்தான் நாங்கள் அப்பாடலின் பொருளைச் சரியாக அறிய முடியும். உதாரணத்திற்கு திருமந்திரத்தில் வரும் 2869 ஆவது பாடலைப் பார்ப்போமானால்

> ‘‘வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
> புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
> தொழுது கொண்டுஓடினார் தோட்டக் குடிகள்
> முழுதும் பழுத்தது வாழைக் கனியே’’

இப்பாடலை சாதரணமாக நாங்கள் பார்ப்போமானால் கத்தரிக்காய் விதையை நட்டால் பாகல் மரம் முளைத்துப் பாகற்காய் காய்த்தது. பூமியில் மண்ணைத் தோண்டினால் பூசணிப் பூ பூக்கின்றது. தோட்டம் செய்யும் குடி மக்கள் வணங்கி விட்டு ஓடினர். அப்போது வாழைப் பழம் பழுத்தது. எனத்தான் இப்பாடலின் பொருளை நாம் கொள்வோம். ஆனால் திருமூலரின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. அதாவது மறைபொருளாக இப்பாடலின் பொருள் கத்தரி விதை மிகவும் சிறியது. யோகப் பயிற்சியில் ஈடுபடுவோரின் யோக முயற்சியின் ஆரம்பத்தை இது குறிக்கின்றது. புருவ நடுவில் நினைவை ஒன்றச் செய்து, தியானம் செய்கையில் மெல்லிய அதிர்வு தோன்றும். இது வளர வளர யோக நினைவால் வைராக்கியமுடைய மனம் அமையும். இதையே கசப்பான பாவற்காய் எனக் கூறப்பட்டுள்ளது. பூமியைத் தோண்ட பூசணி பூத்தது என்றது மனமாகிய நிலத்தில் தத்துவ ஆய்வைச் செய்த போது, மஞ்சள் ஒளி உடைய சகஸ்ரதளம் ஒளி பெற்றது. தோட்டத்துக் குடிகள் வணங்கி வழி விட்டு ஓடினர் என்பது உடம்பில் பொருந்தியுள்ள அந்தக்கரணங்கள், ஐம்பொறிகள் செயலற்று அடங்கின என்பதாகும். வாழைக்கனி முழுவதும் பழுத்தது என்பது தவயோகம் சித்தி பெற்ற நிலையில், வாழைக்கனி போல திருவடிப்பேறு (முத்தின்பம்) கைகூடிற்று என்பதாகும்.

திருமந்திரத்தில் இவ்வாறு பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போமானால் பாடல் எண் 2866

> ‘‘காயம் பலகை கவறு ஐந்து கண்மூன்றாய்
> ஆயம் பொருவதோர் ஐம்பத்தோர் அக்கரம்
> ஏய பெருமான் இருந்து பொருகின்ற
> மாயக் கவற்றின் மறைப்பு அறியேனே’’

வாழ்க்கை ஒரு சூதாட்டம் போல உள்ளது. இதில் மனித உடம்பே சூதாட்டப் பலகை. சூதாட்டக் கருவிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தாகும். சூதாடும் இடம் இச்சை, ஞானம், கிரியை மூன்றின் செயல் நிலைகளும் ஆகும். ஐம்பத்தொரு எழுத்துகளையும் (முன்பு இருந்த தமிழ் எழுத்துக்கள் அ முதல் க்ஷ வரை), சூதாட்டக் காய்கள் நிரப்பு அறையாகக் கொண்டு எம்பெருமான் நிகழ்த்தும் இம்மாயச் சூதாட்டத்தின் உட்பொருள் எனக்குப் புரியவில்லையே.

புதரை அழித்துப் புதுநிலம் ஆக்குக எனக் கூறும் பாடல் எண் 2867

> ‘‘தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
> மாறிக் கிடக்கும் வகைஅறிவார் இல்லை
> மாறிக் கிடக்கும் வகை அறிவாளர்க்கு
> ஊறிக் கிடந்தது என்உள்அன்பு தானே’’

சிவநெறியாகிய தூய்மையதான நன்னெறி புதர்மண்டிக் கிடக்கிறது. கன்மம் மாயை என்னும் பல்பூண்டுகள் களையாக மண்டிக் கிடக்கின்றன. இப்படிப் பாழடைந்துள்ள நிலத்தைத் திருத்திப் புல்பூண்டுகளாகிய புதர்களை அகற்றி, நிலத்தைச் சீர் செய்யும் நினைப்பு எவருக்கும் இருப்பதாய்த் தெரியவில்லை. இதை மாற்றி அமைக்கின்ற வழிமுறைகளை மேற்கொள்பவர்கள் பக்கம், என் உள்ளத்து எழும் அன்பு ஊறிப் பெருக்கெடுத்துப் பெருகி நிற்கும்.

ஏணிமேலேறி எழுகடல் காட்சி எனக்கூறும் பாடல் எண் 2868

> ‘‘ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
> சாறு படுவன நான்கு பனைஉள
> ஏறற்கு அரியதோர் ஏணிஇட்டு அப்பனை
> ஏறல் உற்றேன் கடல்ஏழும் கண்டேன்’’

உடம்பு ஒரு மாளிகைபோல் உள்ளது. இதற்கு ஆறு ஆதாரங்கள் (மூலாதாரம், கொப்பூழ், மேல் வயிறு, நெஞ்சு, கழுத்து, புருவநடு) மாடங்களாக உள்ளன. இந்த மாளிகையில் சந்நிதி போல் உள்ளது மூலாதாரம். இந்த மூலாதாரத்தில், இனிக்கும் சுவைநீர் தரும் பனை மரங்கள் (முதுகுத் தண்டு) நான்கு (நான்கு இதழ் தாமரை போலுள்ள மூலாதாரம்) உள்ளன. இந்தப் பனை மரத்தின் மேல் ஏற வேண்டும். இதற்கு மர ஏணியும், மானிடர் காலும் உதவாது. எனவே அகத்தின் வழி உள்முகமாகப் பிராணன் என்னும் மூச்சுக் காற்றை, சுழுமுனை என்கின்ற நடுநாடியான ஏணி கொண்டு மேலேற்றி, சகஸ்ரதளத்தை (உச்சியை) அடைந்தவுடன், எழுகடல் பிறவி நீங்கக் கண்டேன்.

சிவபதி சேரும் வழி பற்றிக் கூறும் பாடல் எண் 2870

> ‘‘ஐயென்னும் வித்தினில் ஆனை
> விளைப்பதோர் செய்உண்டு செய்யின்
> தெளிவு அறிவார்இல்லை மைஅணி
> கண்டன் மனம்பெறின் அந்நிலம்
> பொய்ஒன்றும் இன்றிப் புக எளிதாகுமே’’

ஐம்பூதத் தொகுப்பாக அமைந்த மனித உடம்பு உருவாக ஒரு விதை மூலம் உண்டு. ஆன்மாவை அறியச் செய்யும் பரம்பொருள் சீவன் திருவருள் ஆற்றலை முழுதுணர்ந்தறிந்தவர்கள் யாருமில்லை. நீலநிறக் கழுத்துடைய பரம்பொருளின் அருட் கருணை கிடைத்தால் அதுவே ஆன்மாக்கள் எளிதில் செல்லும் இடமாகும்.

சிவநிலம் மனித மனம் எனக் கூறும் பாடல் எண் 2871

> ‘‘பள்ளச்செய் ஒன்று உண்டு
> பாழ்ச்செய் இரண்டுள
> கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது
> உள்ளச்செய் அங்கே உழவு செய்வார்கட்கு
> வெள்ளச் செய்ஆகி விளைந்தது தானே’’

பள்ளத்திலே உள்ள பயனற்ற நிலம் ஒன்று இருக்கின்றது. இதுவே உறக்க நிலை. கூடவே பயிர் விளையாத நிலம் இரண்டு இருக்கின்றது. இது நனவு, கனவு என்னும் இரு நிலைகள். இவற்றோடு மறைந்திருந்தருளும் சிவமாகிய விளைநிலமும் அங்கே கலந்திருந்தது. இதனை உணர்ந்து, மனமாகிய அந்த நல்ல நிலத்தை உழுது, பண்படுத்தி விளைவு செய்ய விரும்புபவர்களுக்கு, சிவனருளாகிய வெள்ளம் பாய்ந்து பேரின்ப விளைச்சல் பெருமளவு கிட்டியது.

தொடரும்....









30th ANNIVERSARY
Orientalisch
Textilien & Schmuck
தாபனத்தின் 30 ஆவது
ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு
மாபெரும் ஆடித்தள்ளுபடி
சிறப்பு விற்பனை
01.07.2020 முதல் 01.08.2020 வரை
அனைத்து அலங்கார ஆபரணங்கள் 30% தள்ளுபடி
அனைத்து புடவை வகைகள்,
பஞ்சாபி, சல்வார் கமிஸ்,
குருத்தா, வேட்டி சால்வை
30% முதல் 60% தள்ளுபடி
அன்பளிப்புப் பொருட்கள், வீட்டுப் பாவணைப் பொருட்கள் 30% தள்ளுபடி
அசல் 916/22 உத்தரவாத முத்திரை இடப்பட்ட
தங்காபரணங்கள் சிங்கப்பூர் விலையில்
முன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளுவதற்கும்
Orientalisch Textilien & Schmuck
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
தொடர்புகளுக்கு:- ச.ஜெகதீஸ்
தொலைபேசி:- 0231- 16237 / கைத்தொலைபேசி:- 04792432789
30 வருடகாலமாக ஆதரவு தந்த வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் கரம் கூப்பி நன்றிகள் பல ஆயிரம்...
தரம் உத்தரவாதம்
விலை மலிவோ மலிவு...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சகமனிதர்களுடனான உறவுகளில் பாரிய விரிசலை ஏற்படுத்தி விடுகின்றன.

## உணர்சியை முந்தும் அறிவியல்

பாலுறவு விடயத்தில் முற்காலத்தில் இருந்த ஒளிவு மறைவு, இரகசியத் தன்மை, பரஸ்பர அந்நியோன்யம் போன்றவை இன்று இல்லாமல் போய்விட்டது. அதிலிருந்த கள்ள நாட்டம் காணாதொழிந்துவிட்டது.

மறுவார்த்தையில் சொல்வதானால் பாலுறவு என்பது உணர்வு சார்ந்ததாக இருந்தமை குறைந்து அதில் அறிவியல் அம்சம் மேலோங்கி வருருகிறது என்று சொல்லலாம். இவையும் பாலுறுவில் நாட்டம் குறைவதற்கு காரணமாகலாம்.

மிகையான எதிர்பார்ப்புகளும், அதீத சிந்தனைகளும் முன்பு வெளிப்படிடாயகப் பேசத் தயங்கிய விடயத்தை கூறுபோட்டு பகுத்தறிய விளையும் அறிவியல் தேடல்களும், செயலூகத்தைப் பின்தள்ளிவிட்டது.

'காமம் பாலுணர்வு புணர்தல் போன்ற செயற்பாடுகள் உயிரனத்தின் அடிப்படையான மிருக இயல்பு ஆகும். மனிதன் கூர்ப்பில் மிகவும் மூத்த உயிரினம். தனது மூளைத்திறனினல் தங்கியிருப்பவன் கீழே மறைந்து கிடக்கும் அசிங்கத்தை நாடுவது அவனது அறிவாற்றலுக்கு இழுக்கு' போன்றதான மறைமுக உணர்வும் இளைய சமுதாயத்தில் மேலோங்கி வருகிறது. இவையும் அவர்களது பாலியல் செயற்பாட்டை பின்தள்ளுவதாகக் கொள்ளலாம்.

காலையில் நல்லதா, கும்மிருட்டில் நல்லதா, மேலேயா கீழேயா உச்சம் கிடைக்கும், கண்களை மூடியிருப்பதா, விழித்திருப்பதா, கால்களை அகட்டி வைப்பதா ஒடுக்குவதா? இவை போன்ற கேள்விகளுக்கான விடைகளை இணையத்தில் தேடுவதும், டம்ளரிலும் ருவீட்டரிலும் நண்பர்களிடம் விவாதிப்பதுமாக இருப்பார்கள்.

பாலுறவுச் செயற்பாடு பற்றிய மனப்பதற்றதைக் இவை கிளறிவிடுகின்றன. எல்லாவற்றையும் சரிசெய்துகொண்டு 100 சதவிகித பெறுபேறு கிட்டக் கூடிய நிலையில்தான் உடலால் சுகிக்க வேண்டும் என எண்ணினால் அது நடக்கக் கூடிய காரிணமா?

எனவேதான் மனிதனின் இயல்பான உயிரியல் செயற்பாடுகளை அறிவியல் ரீதியாக நுணிகி ஆயப் புகுவது தோல்வியிலேயே முடிகிறது. இன்னொரு சகமனிதரிலிருந்து பெறக் கூடிய இன்பங்கள் எவை என்



பதையும், அவற்றின் பலாபலன்களையும், அதை எப்படிச் செய்தால் தனக்கும் மற்றவருக்கும் பூரண திருப்தி கிட்டும் என்பதை இணைங்களில் தேடிக்கொண்டிருந்தால் கணனியோடும் ஐபாட்டோடும் புணருவதல்தான் முடியும்.

மொத்தத்தில் பார்த்தால் இன்றைய இளைய தலைமுறையியனர் செக்ஸ் பற்றி அதிகமாகவே சிந்திக்கின்றனர். ஆனால் வேலையால் வீடு திரும்பியதும் ரீவீ பார்க்கிறார்கள், இணையத்தில் மூழ்குகிறார்கள். எல்லாம் முடிய கண்கள் சுழல சோர்ந்து படுத்துவிடுகிறார்கள். நேரமிருந்தால் மட்டுமே செக்ஸ் உறவு என்றாகிவிடுகிறது.

## ஆய்வு தெளிவுறுத்தும் வேறு விடயங்கள்

பிரித்தானியாவில் செய்யப்பட்ட ஆய்வானது இளைஞர்களது பாலியல் நாட்டம் பற்றி மட்டுமின்றி, ஒட்டுமொத்த சமூகத்தின் பாலியல் சம்பந்தமான வேறு பல விடயங்களையும் சுட்டிக் காட்டுகிறது.

மிக இளவயதிலேயே ஆரம்பித்து விடும் செக்ஸ் உறவுகள் முதுமையிலும் [74வயது] தொடர்கிறது

தன்னினச் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து வருகிறது. அதே நேரம்; திருமணத்திற்கு அப்பாலான பாலுறவை ஏற்கும் தன்மை குறைந்துவருகிறது.

பாலியல் உறவுப் பிரச்சனைகள் இருபாலாரிலும் 10 இல் 4 பேருக்கு இருக்கிறதாம். இருந்தபோதும், 10ல் ஒருவரே அதனால் கவலைப்படுவதாகவோ மனஉழைச்சலுக்கு ஆளாவதாகவோ கூறினார்கள். பாலுறவில் நாட்டமின்மையையே 15 சதவிகிதமானவர்களின் முக்கிய பிரச்சனை இருந்திருக்கிறது. அதிலும் பெண்கள் ஆண்களை விட இரு மடங்காக பாலுறவு நாட்டமற்றுக் காணப்பட்டார்கள்.

விருப்பதிற்கு மாறாக உடலுறவு வைக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டு இருந்திருக்கிறது. பெண்கள் அதிக பாதிப்பிற்கு ஆளான போதும் ஆண்களும் தப்பவில்லை. 10 பெண்களில் ஒருவர் இஷ்டமின்றி உடலுறுவு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த அதே நேரம், 70 ஆண்களில் ஒருவருக்கு அத்தகைய நிலை ஏற்பட்டதாம். எந்தப் பெண்ணைக் கண்டாலும் புணரும் வேட்கையோடு திரியும் எமது சமூகச் சூழலோடு ஒப்பிடும்போது இத்தகவல் ஆச்சரியம் அளிக்கிறது.

பிரித்தானியாவில் ஏற்படும் கருத்தங்கல்களில் ஆறில் ஒரு பங்கு எதிர்பாராததாக [திட்டமிடப்படாததாக] இருக்கிறது. மற்றொரு விதத்தில் பார்த்தால் 60 பெண்களில் ஒருவர் எதிர்பாராதவிதமாக கருத்தங்கலுக்கு ஆளாகிறார்கள். கருக்கலைப்பு சட்டபூர்வமாக இருக்கும் பிரித்தானியாவில் இது பாரிய சிக்கலை ஏற்படுத்தாது.

ஆனால் மதம் புனிதத்துவம் கண்ணியம் எனப் மேடைக்கு மேடை பேசிக் கொண்டு இருளில் பெண்களைக் குதறி எடுக்கும் நம்நாட்டில் சட்டவிரோத கருக்கலைப்புகளால் பலியாகும் பெண்களின் எண்ணிக்கை தூய்மைவாதிகளின் கண்ணில் படுவதில்லை. சிறுவர் துஸ்பிரயோகம் பாலியல் வன்புணர்வு போன்றவற்றால் கர்ப்பமுறும் பெண்களின் துயரம் கவனத்தில் கொள்ளப்படாத ஒரே புனித பூமி சிறிலங்காவாத்தான் இருக்கும்.

**என்ன சொல்ல என்ன சொல்ல இன்னும் சொல்லி நீங்கள் அழ........**


**நன்றி: முருகானந்தன் கிளினிக்**







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# உண்டால் அம்ம இவ்வுலகம்!



தனசேகர் பிரபாகரன்

இறுகிய நாட்கள் தொடர்ந்து நீளுகின்றன, இதெல்லாம் ஒரு கனவாய் இருந்து சட்டென விழித்துப் பார்க்கையில் உலகம் பழைய நிலைக் குத் திரும்பாதா என்று கனவுக்காக நித்திரைகொள்ளும் மனங்கள் ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கின்றன, ஒரு புறம் மனிதர்கள் வீட்டினுள் அடைந்து கிடைக்க மறுபுறம் இயற்கை தன் னைத் தானே சரி செய்துகொண்டிருக் கிறது.

கங்கையில் தூய நீர் பெருக்கெடுத்து ஓட, அறிய தாவரங்களும் பறவை களும் பாடிக்களிக்கின்றன. எந்த சோதனை வந்த போதும் இந்த உலகம் சுழன்று கொண்டுதான் இருக்கிறது. வள்ளுவர் மழை பெய்வதற்கு அழ காய்ச் சொல்லுவார் நல்லோர் ஒருவர் இருந்தால் அவருக்காக மழைப் பெய் யும் என்று அது போல, நல்ல மனங்கள் இருப்பதால் தான் இந்த உலகம் இன்ன மும் அழியாமல் இருக்கிறது.

இதனை நாம் இன்றைக்கு யோசி த்துப் பார்க்கிறோம், ஆனால் அடுத்த வர்க்கு ஒரு குறையென்றால் இயற் கையிலேயே பதறும் தமிழர் மனம் அன்றே யோசித்திருக்காதா ? தமிழ் இலக்கியங்கள் உலகிற்கே வழிகாட்டி அல்லவா ?

மூன்று தமிழும் செழித்து வளரும் இடம், வற்றாத வையை வளங்கொழிக்கும் இடம், நீரில் விளையாடும் கெண்டை மீன்கள் வானில் தென்ன வனின் கொடியில் பறக்கும் இடம், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை அது, அந்த பெருமையு டைய மதுரை நகரை தலைநக ராக்கி சங்ககாலத்தில் பாண்டியர் மரபில் உதித்த மன்னன் ஒருவன் பல நாடுகளுகையும் வென்று கப் பல் படையால் சாவகம், கடாரம் என நாவாய்கள் ஓட்டி பெரும்புகழ் அடைந்திருந்தான். அவன் பெயர் இளம்பெருவழுதி !

கடற்படை போருக்குச் செல்லும் பொழுது மன்னர்களும் தம் கடற்படை யோடு செல்வது வழக்கம். அவ்வாறு கடற்படையோடு இளம்பெருவழுதி சென்ற பொழுது, அவன் சென்ற கப் பல் கவிழ்ந்ததால் அவன் கடலில் மூழ்கி இறந்தான். அவனுக்கு கட லுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பெயர் நிலைத்துவிட்டது, ஆனால் வெறும் நாவாய் ஓட்டி நாடுகளை வெல்லும் அரசனாய் மட்டும் இருந்தி ருந்தால் இன்றைக்கும் அவனை நாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம், ச ங்கத்தில் இருந்து தமிழ்க் கவிகள் எழு தியிருக்கிறான் அவன்.

சங்க இலக்கியத் தொகுப்பில் புறநா னூற்றில் ஒரு பாடலையும் பரிபாடலில் ஒரு பாடலையும் இவன் பாடியிருக்கி றான்.

அவன் யோசித்திருக்கிறான் இப்பா டல் மூலம் ஏன் இந்த உலகம் இன்ன மும் நிலைபெற்றிருக்கிறது என்று.

*‘உண்டால் அம்ம இவ்வுலகம்*
*இந்திரர்*
*அமிழ்தம் இயைவ தாயினும்,*
*இனிதுஎனத்*
*தமியர் உண்டலும் இலமீர்*
*முனிவிலர்*
*துஞ்சலும் இலர் பிறர்*
*அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்*
*பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்*
*அயர்விலர்*
*அன்ன மாட்சி அனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர்*
*உண்மை யானே*

**(புறம்: 182)**

தன்னலம் துறந்து வாழ்பவர்கள் இந்திரனின் தேவாமுதம் போன்ற கிடைப்பதற்கரிய பொருள் கிடைத் தாலும் கூடத் தனக்கென மட்டுமே பதுக்கி,ஒதுக்கி வைத்துக் கொள்ளாத வர்களாகப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம் பும் பண்பாளர்களாக மட்டுமே இருப் பார்கள்.

யாரையும் அவர்களால் வெறுக் கவோ,பகையாளிகளாக ஆக்கிக் கொள்ளவோ முடியாது. எவருமே செய்ய அஞ்சக் கூடிய பழிச் செயல் களுக்கு அஞ்சி அவற்றைச் செய் யாமல் இருப்பதோடு, அவற்றுக்குத் தீர்வு காணக் கூடிய செயல்க ளில் மனச் சோர்வும் சலிப்பும் கொள்ளாமல் தொடர்ந்து இயங் குவர்.

புகழுக்காகத் தங்கள் உயி ரையையும் கொடுக்கத் துணி யும் அவர்கள் பழி வருமெனின் உலகையே பரிசாகத் தந்தாலும் அப்படி ஒரு செயலைச் செய் யத் துணியாதவர்கள். மனதை எந்த வகையான சஞ்சலங்க ளுக்கும்,உளைச்சல்களுக்கும் ஆட்படுத்திக் கொள்ளாதவர்களா க-எடுத்த காரியம் வெற்றியுடன் முடிய வேண்டுமென்ற ஒற்றை இலக்குடன் மட்டுமே உறுதியு டன் இயங்குவர். தனது முயற்சிக ளை,சக்திகளைப் பிறருக்காகவே அர்ப்பணித்து வாழும் அத்தகைய மாண்பிற்குரியாளர்களால்தான் உலகம் சுழல்கிறது என்கிறது பாடல் திருக்குறளில் பல அதி காரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் இப்பாடலில் சுருக்கமாகக் கூறப்ப டிருக்கின்றன. குறிப்பாக, விருந் தோம்மபல், அன்புடைமை, வெகுளாமை, அறிவுடைமை, மடியின்மை, தீவினையச்சம், ஊக்கமுடைமை, புகழ், ஈகை, ஒப்புரவு, பண்புடைமை ஆகிய அதிகாரங்களின் மையக்கருத்து களை இப்பாடலில் காணலாம்.

சில சமயம் அடைந்து கிடப்பதும் நமக்கு சில படிப்பினைகளை சொல்லிக்கொடுக்கத்தான், பிற ரையும் வாழவைத்து நாம் வாழ் வோம் ! அதனால் தானே உலகம் இன்றும் நிலைத்திருக்கிறது ?





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில்தான் இந்தக் கவனயீர்ப்பு எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இதனை தடுப்பதற்காக அதிகளவுக்குப் பலத்தைப் பொலிஸார் பயன்படுத்தினார்கள். அமைதியாக நடைபெற்ற போராட்டகளம் போர்க்களமாக்கப்பட்டது. 50க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரைக் கைது செய்யும் போது பொலிஸார் செயற்பட்ட முறை கடுமையான கண்டனத்தைப் பெற்றிருக்கின்றது.

பொலிஸாரின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியமை சட்டப்படி தவறானதாக இருக்கலாம். ஆனால், போராட்டம் அமைதியாகவும், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியுமே நடத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு இந்தளவுக்கு மோசமாகப் பலத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. கொஞ்ச நேரத்தில் கலைந்து சென்றிருக்க வேண்டிய ஆர்ப்பாட்டத்தை அநாவசியமாக பொலிஸாரே குழப்பி அமைதியின்மையை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டை மறுதலிக்க முடியாதுள்ளது. இது எதிர்ப்புப் போராட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது.

## பத்திரிகையாளர் மீதான அச்சுறுத்தல்

பத்திரிகையாளர் தரிசா பஸ்டியனின் மடிக்கணினியை பொலிஸார் கைப்பற்றிய சம்பவம், இலங்கை ஊடகத்துறையினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. மடிக்கணியை அதிகாரிகள் உடனடியாக திருப்பி ஒப்படைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு, தரிசா துன்புறுத்தல்கள் எதுவுமின்றி தனது பத்திரிகை பணியை செய்வதற்கு அனுமதிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பரில் கொழும்பில் சுவிஸ் தூதரக பணியாளர் கடத்தப்பட்டமை தொடர்பில் இடம்பெற்றுவரும் விசாரணைகளின் தொடர்பில் சிஐடி அதிகாரிகள் தரிசா பஸ்டியனின் வீட்டை சோதனையிட்டு அவரது மடிக்கணியை எடுத்துச்சென்றுள்ளனர் என அவர் டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.



நியுயோர்க் டைம்சிற்காக பணியாற்றுபவரும், இலங்கை அரசாங்கத்தின் சண்டே ஒப்சேவரின் முன்னாள் ஆசிரியருமான தரிசா பஸ்டியன் முன்னர் இரு தடவைகள் நீதிமன்ற உத்தரவின்றி தனது மடிக்கணியை கைப்பற்ற முயன்றனர், இம்முறை உத்தரவுடன் வந்திருந்தனர் என தெரிவித்துள்ளார்.

தூதரக பணியாளரின் கடத்தல் நாடகம் ஒரு திட்டமிட்ட நாடகம் என குற்றம்சாட்டிவரும் இலங்கை அதிகாரிகள், தரிசா பஸ்டியன் தூதரக பணியாளருடன் தொடர்பிலிருந்தார், அவருக்கு இந்த கடத்தல் விவகாரத்துடன் தொடர்புள்ளது என தெரிவிக்கின்றனர். பஸ்டியன் கடந்த நவம்பரிலேயே இலங்கையிலிருந்து வெளியேறிவிட்டார். அவரது குடும்ப உறுப்பினர்கள் வீட்டிலிருந்தவேளையே அங்கு சோதனைகள் இடம்பெற்றுள்ளன.

தரிசா பஸ்டியனின் மடிக்கணிணியை கைப்பற்றியமைக்கு பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு கடுமையான ஆட்சேபணையை வெளியிடுவதாக தெரிவித்துள்ள அந்த அமைப்பின் ஆசியாவிற்கான ஆராய்ச்சியாளர் அலியா இப்திஹார் இந்த நடவடிக்கை பத்திரிகையாளரின் செய்தி மூலங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என தெரிவித்துள்ளார்.

தரிசா பஸ்டியனிற்கு எதிரான அச்சுறுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அதிகாரிகள் உடனடியாக முடிவிற்கு கொண்டுவரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது விமர்சனத்துடனான செய்திவெளியிடலிற்கான பழிவாங்கல் நடவடிக்கையாகவே இது இடம்பெறுகின்றது. குறிப்பிட்ட மடிக்கணிணி கைப்பற்றப்பட்ட பின்னர் அது மாற்றங்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதா என ஆராயுமாறு 16ம் திகதி நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷ ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே இந்த இரு சம்பவங்களும் பார்க்கப்படுகின்றன.

---

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கொக்குவில் இந்துகல்லூரி ஆசிரியரும் (தற்போது குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயம்) திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வலன்ரீனா இளங்கோவனுக்கு அவரது சேவையைப் பாராட்டி வெற்றிமணி விருதினை யேர்மனி கம் நகரபிதா வழங்கி கௌரவித்தார்.

இவ்விருதே அவர்களுக்கு வெளிநாடு ஒன்றில் கிடைத்த முதல் கௌரவமாகும்;. அத்துடன் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் பேராவிற்கு மதிப்பளித்து திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்கள் எழுதிய யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள் என்ற நூலை வெற்றிமணி 23.08.2008 ஆண்டு யேர்மனியில்; வெளியிட்டது.

2009 ஆண்டுக்குப்பின் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த



சிறுவர்களுக்கும் யாழ் மண்ணில் வசதியற்ற மாணவர்களையும் இணைத்து 2014 ஆம் ஆண்டு வெற்றி;மணி கல்வி மையம் என்னும் அமைப்பை உருவாக்கி இலவச வகுப்புகளை நடத்தி தனது கல்விபணியின் புதிய பரிமாணத்தை தோற்றுவித்தார். அதற்கான ஆசிரியர்களின் ஊதியத்தின் ஒருபகுதியினை எனது மகள் சிவஜெனனி அரவிந்தன் ஏற்றுக் கொண்டார்.

குடும்பம் பாடசாலை இவற்றுடன் தனது பணி நிற்காது தேடித் தேடி தன் சேவையை செய்ய முன்னிற்கும் குணம் அவருக்கு இயல்பாகவே அமைந்தது. 1984 ஆண்டு குரும்பசிட்டியில் இருந்து கிராமமுன்னேற்றச் சங்கம் வன்னியில் வெள்ளத்தால் பாதிக்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வானில் ஏற்றி அனுப்பினர். அன்று பொருட்களை ஏற்றுவதில் இருந்து இன்று கொரோணாவால் பாதிக்கபட்ட மக்கள் ஏழ்மை நிலை போக்குவது வரைக்கும் அவரது சேவை ஏறு வரிசையாகவே உள்ளது.

எனது மணிவிழாவினை நான் கற்ற குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தில் பெருவிழாவாக எடுத்து சிறப்பித்ததுடன் எனது தந்தையின் பெரு முயற்சியால் கட்டி முடிக்கப் பட்ட மண்டபத்தில் யாவருக்கும் மதிய உணவுவளித்து மகிழ்ந்ததையும் மறக்கமுடியாது. தான் கற்ற பாடசாலையில் தனக்கு மணிவிழா என்றால் அது பெரும் வரம் அல்லவா. அத்துடன் கலைமகன் என்னும் மணிவிழா சிறப்பு மலரையும் யாழ் வெற்றிமணி சார்பா வெளியிட்டு மகிழ்ந்தார்.

இத்தனை சேவைகளை தனன்னகத்தே வரிந்து கட்டிக்கொண்டும் அவர் தனது கல்வியை பல்கலைக்கழத்தில் கிடைத்த பி.ஏ யுடன் நிறுத்தாமல் அவரது பெயருக்குப்பின்னால் ஆ.யு ஆ.கடை அதன் பின் இன்னும் இன்னும் என கற்றுத் தெளிந்துகொண்டே இருப்பது பெருமை தருகிறது. ஆசி.நடராஜா அவர்களுக்கு இரு புதல்விகள் மட்டுமே.ஒன்று வலன்ரீனா இளங்கோவன், அடுத்து அஞ்சலா.பிரபாகரன். இவர் யாழ் பல்கலை கலைப்பட்டதாரி (சிறப்பு;) சுவிஸ் நாட்டில் இருந்து தமிழ்பணி செய்பவர். வலன்ரீனாவின் சேவை முடிந்த வரை எவ்வித பிரதேச வேறுபாடுகளும் அன்றி செய்து வருதைக் காணமுடிகிறது. அவர் தொண்டு சிறக்க வெற்றிமணி வாழ்த்துகின்றது.


# சிவபூமியின் நற்பணிக்கு உதவுங்கள்

**SIVAPOOMI SCHOOL**
ACCOUNT NAME-SIVAPOOMY
COMMERCIAL BANK - JAFFNA
CURRENT ACCOUNT NO- 1060016510
SAVING ACCOUNT NO - 8060016509
SWITCH CORD - CCEYLKLX

**SIVAPOOM ELDERS HOME**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - CHUNNAKAM
CURRENT ACCOUNT NO-117010003432
SAVING ACCOUNT NO - 117020039455
HNB Swift Code: HBLILKLX

**SIVAPOOM MADAM-KEERIMALAI**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - CHUNNAKAM
CURRENT ACCOUNT NO-117010007096
SAVING ACCOUNT NO - 117020151163
HNB Swift Code: HBLILKLX

**SIVAPOOM SCHOOL- KILINOCHCHI**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - kILINOCHCHI SOUTH.
CURRENT ACCOUNT NO-146010005265
SAVING ACCOUNT NO - 146020096897
HNB Swift Code: HBLILKLX

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

நமது வாசம் என்றும் கூட கூறலாம். ஒவ்வொருவரின் மரபணுக்களைப் பொருத்து, இந்த pheromones இன் வாசம் அமையும். இதில் உள்ள சுவாரசியமான விஷயம் என்னவென்றால், கிட்டத் தட்ட நமது மரபணுக்கள் போலவே இருக்கும் ஆண் அல்லது பெண்ணைத் தான் நாம் கவர்ச்சி என்று எண்ணுகிறோம்.

ஒருவர் அழகாக அல்லது கவர்ச்சியாக இருப்பதற்குப் பின்னால் இவ்வளவு அறிவியல் இருக்கிறது என்று நினைக்க ஆச்சரியமாக இருக்கிறதா? அட, நமக்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிப்பதே பெரும் அதிசயம், அதற்குள் மனிதர்களாகிய நாம், இனம், மதம், ஜாதி, மொழி என்று பிரிவுகளை உண்டாக்குவது மட்டுமில்லாமல், திருமணம் செய்வதற்கு முன்பு தினப் பொருத்தம், கணப்பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், தாலிப் பொருத்தம், ராசிப் பொருத்தம்,வசியப் பொருத்தம் போன்ற பல்வேறு பொருத்தங்களைப் பார்த்த, தோசங்கள், ஏழில் அல்லது எட்டில் உள்ள செவ்வாய், ராகு கேதுவின் நிலைப்பாடு போன்ற அறிவியலுக்கு மீறிய விஷயங்களுடன் எங்கள் வாழ்க்கையைக் கட்டுப் படுத்திக் கஷ்டப்படுகின்றோம். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scini-rosh) அறியத் தாருங்கள்!

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அமைதியாக இருந்து மனதை புத்துணர்வாக வைத்துக் கொண்ட பின்னர் மகிழ்வோடும், அன்போடும் அக்கறையாக சமையல் செய்ய வேண்டும். இந்தப் பொறுப்பு மற்றவருடைய தனிப்பட்ட வாழ்வில் விளைவுகளை ஏற்படுத்தவல்லது என்பதை உணர்ந்து செயற்படுவது அவசியம். முக்கியமாக உணவை உண்பவர் மேற்சொன்ன விடயங்களில் சிக்கல் இருப்பினும், இல்லாதவிடத்தும் உணவை உண்ணுவதற்கு முன்பு நேர்மறையான சிந்தனையோடு இயற்கைக்கோ, இறை சக்திக்கோ அல்லது சமைத்தவருக்கோ நன்றி உணர்வோடு அந்த உணவு உடலுக்கும், மனதிற்கும் நலம் வழங்க வேண்டும் என தன் உணவைத் தானே ஆசிர்வதித்து பின் உண்ண வேண்டும். அப்போது அந்த உணவு உண்ணத் தகுந்த நல்ல அதிர்வலையோடு இருக்கும்.

ஆகவே உணவை உண்பவர், உணவை தயாரிப்பவர், பரிமாறுபவர் யாவருமே வாழ்வின் மீது சிறிதளவேனும் மதிப்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருந்தால், வாழ்வை மற்றுமோர் பரிணாமத்துக்கு முன்னெடுத்து செல்ல விரும்பினால் உண்ணும் உணவு, அவை ஆக்கப்பட்ட முறை, மற்றும் அவற்றை உட்கொள்ளும் விதத்திலும் முழுமையான கவனத்தை செலுத்த வேண்டும்.

உணவு சாதாரண விடயமென எண்ணி குப்பையை உணவாக்கி தொப்பையை வளர்க்கக் கூடாது. விருந்தோம்பும் தாய்மைத் தன்மையானது கனிவான எவரிலும் இருக்கும். அவர்களின் சமையலில் அன்பிருக்கும், சுவையிருக்கும், சுவையோடு கலந்து அக்கறை இருக்கும், அக்கறைக்குள் பொதிந்து சத்து வழி இருக்கும், சத்துக்குள் சித்து இருக்கும், சித்துக்குள் ஆனந்தம் இருக்கும்.

06 ஆம் பக்கத் தொடர்ச்சி...



எனவே, பழங்களை வாங்கும்போது கவனமாகப் பார்த்து வாங்க வேண்டியது மிக அவசியமாகிறது. பழங்கள் இயற்கையாகப் பழுத்தவையா அல்லது செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்டவையா என்று எப்படிக் கண்டறிவது?

செயற்கையாக பழுத்த பழங்கள் பளபளப்பாக மெல்லிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். காம்புப் பகுதியை கீறிமணந்தால் புளிப்புத் தன்மைக்கான மணம் வீசும். இயற்கையாகப் பழுத்த பழம் மெதுமையாக இருக்கும். ஆனால், செயற்கையாகப் பழுக்கவைக்கப்பட்ட பழங்கள் திடமாகவும் கனமாகவும் இருக்கும்.

கல்சியம் கார்பைடு மூலமாகப் பழுக்கும் பழங்கள் முறையான வடிவத்தில் பழுக்காமல் திட்டு திட்டாக, பழுத்த தோற்றத்தில் நிறம் மாறி இருக்கும். வெட்டிப்பார்த்தால் உள்ளே மினுமினுப்பாக இருக்கும்

பழத்தில் குறிப்பிட்ட ஓரிடத்தில் மட்டும் தீப்பட்டதுபோல கறுப்பாக இருந்தால், அது கண்டிப்பாக கார்பைடு கல்லால் பழுக்க வைக்கப்பட்டது.

முக்கியமாக பழங்களை உண்டபின் வாயில் அரிப்பெடுத்தால் அந்தப் பழங்களை தொடர்ந்து உண்ணாதீர்கள்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அப்படியானால் முற்பிறப்பு ஞாபகம் தனது மகனுக்கு எப்படி வந்தது. அல்லது மொழி கூட (DNA) டீ.என்.ஏ. மூலம் தொடர வாய்ப்புள்ளதா? என பலகேள்விகள் தனக்குள் கேட்டுக்கொண்டார்.

எது எப்படி இருந்தாலும் அவர் அருகில் இருந்த தாதியோ எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம், அவர் பேசியமொழி பிரஞ்சுமொழி. அதிலும் ஒரு சிறந்த மொழியாற்றல் உடைய பிரஞ்சுக்காரார் ஒருவரது பேச்சை அது ஒத்திருந்ததுதான் மிகப்பெரிய ஆச்சரியம் என்றார். இப்படியும் நடக்குமா? நடந்தது உண்மை. ஆனால் காரணம் புரிந்தும் புரியவில்லை.

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பெற்றோரின் மகள். ஆனால், நீங்கள் நடித்திருப்பது இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குக் குடியேறிய தமிழ்ப் பெற்றோரின் மகளாக. வித்தியாசம் உணர்ந்தீர்களா?

பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. உச்சரிப்பு கொஞ்சம் வேறுபடும். நடை, உடை பாவைனயில் சின்ன மாற்றம். அவ்வளவுதான். தமிழையும் தமிழர்கைளயும் நில எல்லைகள் பிரிப்பதில்டிலேய. உங்கள் உண்மையான வாழ்க்கை, நீங்கள் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தின் வாழ்க்கையிலிருந்து பெரிதாக மாறுபடுகிறதா?

நான் நீதிக்காகவும், சம உரிமைக்காகவும் போராடும், கல்விக்கு முதலிடம் கொடுக்கும் பெண்.அந்த வைகயில் என் வாழ்க்கையுடன் கதாபாத்திரம் ஒத்துப் போகிறது. இக்கைத ஓர் அமெரிக்க



இந்தியத் தமிழ்ப்பெண், வெள்ளைக்காரர்கள் படிக்கும் ஓர் உயர்நிலைப்பள்ளியில் தன்னை நிரூபிக்கப் பாடுபடுவைதச் சொல்கிறது. அந்தப் பெண்ணுக்குத் தாயாருடன் பிரச்சைன, நண்பர்களுடன் பிரச்சைன. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பொய்க்கு மேல் பொய் சொல்கிறாள். அது அவல நைகச்சுவையாகச் சூழலில் விழுந்து தெறிக்கிறது.

ஆனால், பொய் பேசுவதும், பெற்றோரிடம் சண்டை போடுவதும், பையனுக்காக அலைவதும் என் வாழ்க்கையில் இல்லை. ஏனென்றால், நான் தமிழ்ப் பெண். தொடரில் ஒரு காட்சியில் கடலிலே உங்கள் தந்தையின் அஸ்தியைக் கைரக்கும் இடம் கலங்கவைத்துவிட்டது. அதில் நடித்தேபாது என்ன உணர்ந்தீர்கள்?

எனக்கு உறவினர்கள் அமெரிக்காவிலும், கனடாவிலும், ஜெர்மனியிலும், இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ளனர். நான் நிறைய சாவுகைளக் கண்டிருக்கிறேன். சாவை எதிர்கொள்வதில் ஒரு குடும்பத்துக்கு உள்ள சங்கடம் எனக்குத் தெரியும். சாம்பைலக் கடலில் கைரத்து என் அப்பாவுக்கு விடுதைல கொடுத்தேன். அவர் என்னை விட்டுப் பிரிந்த கோபத்தை ஆற்ற எனக்கு ஒரு வழி கிடைத்தது. அவர் இயற்டிகேயாடு கலந்த அந்த நேரம் எனக்கு இயல்பாகேவ அழுகை உடைத்துக்கொண்டு வந்தது. கிளிசரின் தைவப்படவில்லை.

இப்போது ரொறன்ரோ பல்கைலக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கும் பணி நடக்கிறது. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழை வீட்டிலும் வெளியிலும் பேசும் ஒரு நாட்டில் தஞ்சம் புகுந்து வாழ்வதில் இருக்கும் மகிழ்ச்சி,அதே நாட்டில் உள்ள முதன்மைப் பல்கைலக் கழகத்தில் நம் மொழிக்கு இருக்கை அமைய இருப்ப துபற்றிக் கேட்டேபாது இரட்டிப்பானது. தமிழ்தான் நம் அனைவரது அடையாளமும். ஹாலிவுட்டில் எனது பெயைர மாற்றக்கேட்டேபாது மறுத்துவிட்டேன். என் பெயர்தான் நான் தமிழ்ப் பெண் என்பைதக் கூறும். உலக மொழியான தமிழ், இக்காலக்கட்டத்தில் உண்மையாகேவ உலக மொழிகளில் ஒன்றாகும் கனைவ நனவாக்கும் காலம் வெகு அருகில் வந்துவிட்டதாகேவ நினைக்கிறேன். இதை முன்னெடுக்கும் அனைவைரயும் வாழ்த்துகிறேன்.

**நன்றி: தமிழர்தகவல் - கனடா**






# இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் வாழ்வும் படைப்பும்



வெற்றிமைந்தன்

தெலுங்கு சினிமாவின் உச்சத்துக்குக் கொண்டு சென்ற ஒரு படம் ‘மரோசரித்ரா’.

கமலஹாசன் தான் ஹீரோ! சரிதா ஹீரோயின். கூடவே சரத்பாபு, மாதவி இருவரும் முக்கியமான கதாபாத்திரங்களில் நடித்தனர்.

சிறந்த இயக்குனருக்கான ஃபிலிம் பேர் விருதை வாங்கித் தந்த சூப்பர் டூப்பர் ஹிட் படமாக மரோ சரித்ரா நிலை பெற்று விட்டது.

கமலஹாசனை தெலுங்கு உலகில் ஹீரோவாக அறிமுகம் செய்து வைத்த படமும் இது தான். இதற்கு முன் பாலசந்தரின் அந்துலேனி கதா படம் மூலம் கமல் தெலுங்கு திரையில் மாத்லாடியிருந்தார். ஆனால் அது சின்ன கதாபாத்திரம் தான்.

அதே போல மன்மத லீலை படம் தமிழில் சக்கை போடு போட்டதால் அதை அப்படியே அலேக்காக தெலுகு பேச வைத்தார்கள். அதுவும் சூப்பர் ஹிட். திரைகளில் நூறுநாட்கள் தொட்டது அந்தப் படம். எனவே கமல் அப்போதே தெலுங்கு தயாரிப்பாளர்களின் கண்களில் சிக்கி விட்டார். நிறைய இயக்குனர்கள் கமலை ஹீரோவாகப் போட்டு சில மன்மத லீலைகள் உருவாக்க நினைத்தார்கள். கமல் ஒத்துக் கொள்ளவில்லை.

‘என்னுடைய குரு பாலசந்தர் மூலமாகத் தான் தெலுங்கில் ஹீரோ ஆவேன். அதுவரை காத்திருப்பேன்’ என்பதே கமலின் முடிவாக இருந்தது. பாலசந்தர் பக்காவான ஒரு கதையுடன் கமலை தெலுங்கில் ஹீரோவாக்கினார்.

தமிழ்ப் பையனும், தெலுங்குப் பெண்ணும் காதலிக்கிறார்கள். ஒருவருடம் இருவரும் சந்திக்கக் கூடாது என குடும்பத்தினர் தடை போடுகிறார்கள். அந்தக் காலகட்டத்தில் துயரமான நிகழ்வுகள் நடக்கின்றன என்பது தான் படத்தின் ஒன்லைன்.

இந்தக் கதையை கமலஹாசனுக்காகவே பாலசந்தர் உருவாக்கினார். இந்தப் படத்தை தெலுங்கில் எடுப்பதற்குக் காரணமும் கமலை தெலுங்கில் ஹீரோவாய் அறிமுகம் செய்வது தான்.

படத்தில் தமிழ் பையன் கமல், தெலுங்குப் பெண்ணாக நடிக்க ஒரு புதுமுகம் வேண்டும் என தேடினார்கள்.

நிறைய பெண்களைப் பார்த்தும் யாரும் ஒத்துவரவில்லை. கடைசியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த அபிலாஷா எனும் பெண்ணை ஹீரோயினாக தேர்ந்தெடுத்தார். ஆள் கறுப்பு. ஹீரோ கருப்பாய் இருந்தாலே ஒத்துக் கொள்ளாத காலம் ஹீரோயின் கருப்பாகவா? ரொம்பவே தப்பான முடிவு என எல்லோரும் எதிர்த்தார்கள். பாலசந்தர் பிடிவாதமாய் இருந்தார்.




‘இந்தப் பெண் தான் இந்தப் படத்துக்கு சரியாக இருப்பாள்’ என 161 பெண்களை நிராகரித்து 162வதாக வந்த அபிலாஷாவை தேர்ந்தெடுத்தார் பாலசந்தர்.

அந்த அபிலாஷா தான் சரிதா ! அபிலாஷா எனும் பெயருக்குப் பதிலாக பாலசந்தர் அவளுக்கு வைத்த பெயர் தான் சரிதா.

பாலசந்தரின் துணிச்சல் அபரிமிதமானது. கமல் ஹீரோவாக தெலுங்கில் அறிமுகமாகும் படம். கூடவே கதாநாயகி புதுசு. அதுவும் கருப்பு. இது போதாதென்று படத்தையும் கருப்பு வெள்ளையிலேயே எடுத்தார். கலர் படங்கள் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் கருப்பு வெள்ளையில் படத்தை எடுத்து அதை மாபெரும் வெற்றிப் படமாய் மாற்றியதற்குக் காரணம் அவரது தன்னம்பிக்கையும், துணிச்சலும் தான்.



படம் ரிலீசானது.முதல் வாரம் படம் ரொம்ப ரொம்ப சுமார். கூட்டமே இல்லை.‘கருப்பு நிறத்துல ஒரு ஹீரோயின், எவன் படத்தைப் பாப்பான்?’ என கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் இரண்டாவது வாரமே படம் சுறுசுறுப்படைய ஆரம்பித்தது. அப்போது ஆரம்பித்த ஓட்டம் தான். அது வருடங்கள் தாண்டியும் நிற்கவில்லை.

ஆந்திராவில் 450 நாட்கள் தொடர்ச்சியாய் ஓடிய பிறகு தான் படம் தனது ஓட்டத்தை நிறுத்தியது !தெலுங்கு தேசத்தில் படம் பட்டையைக் கிளப்பி ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்த தயாரிப்பாளர் அதை அப்படியே தமிழ் நாட்டிலும் கர்நாடகாவிலும் வெளியிட்டார். டப்பிங் எதுவும் செய்யவில்லை. அப்படியே நேரடி தெலுங்கு படமாகவே வெளியானது. பெங்களூரில் 300 நாட்கள் ஓடி தயாரிப்பாளரை குஷிப்படுத்தியது. தமிழகத்தில் சபையர் திரையரங்கில் வெளியாகி எவ்வளவு நாட்கள் ஓடியது தெரியுமா ? 596 நாட்கள் !!!!

படம் பாலசந்தருக்கு சிறந்த இயக்குனருக்கான தென்னிந்திய பிலிம் ஃபேர் விருதையும் வாங்கித் தந்தது.

இந்தப் படத்தின் இந்திப் பதிப்பு வெளியான போது இந்தித் திரையுலகையே புரட்டிப் போட்டது. வட இந்

30 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

தியர்களை வியக்கவும், வியர்க்கவும் வைத்தது. அது தான்..

**ஏக் துஜே கேலியே.**
**ஏக் துஜே கேலியே**

1978ல் மரோ சரித்ரா வெளியாகி தென்னிந்தியாவில் பரபரப்பைக் கிளப்பியது. அந்தப்படத்தை இந்தியில் பாலசந்தர் 1981ல் இயக்கினார். அந்தப் படம் தான் ஏக் துஜே கேலியே. இந்தியே சுத்தமாய்த் தெரியாதவர்கள் கூட நிச்சயம் 'தேரே மேரே பீச் மே' எனும் எஸ்பிபியின் மந்திரக் குரலைக் கேட்டிருப்பார்கள். இந்தப் படம் எஸ்.பி.பிக்கு தேசிய விருதைப் பெற்றுத் தந்தது.

இந்திய சினிமாவின் வியத்தகு பாடகர், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இந்திய மொழிகள் பலவற்றில் பாடி வரலாறு படைத்தவர் எஸ்.பி.பாலசுப்ரமணியம். அவர் இந்தியில் அறிமுகமான படம் ஏக் துஜே கேலியே. முதல் படத்திலேயே தேசிய விருதையும் வாங்கி பிரமிக்க வைத்தார் எஸ்.பி.பி. 1966ம் ஆண்டு




தெலுங்கு திரையுலகில் பாடகராய் அறிமுகமாகி, 1969ம் ஆண்டு 'இயற்கை எனும் இளைய கன்னி' எனும் பாடலின் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் எஸ்.பி.பி.

அதன்பிறகு அவருடைய ஓட்டம் நிற்கவேயில்லை. எஸ்.பி.பி ஒரு வித்தியாசமான சாதனை வைத்திருக்கிறார். ஒரே நாளில் அதிக பாடல்களைப் பாடி ரெக்கார்ட் செய்தவர் எனும் சாதனை ! எவ்வளவு தெரியுமா ? 21 பாடல்கள் ! கன்னட மொழியில், உபேந்திர குமார் இசையில் பெங்களூரில் காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை இடைவெளியின்றி 21 பாடல்கள் பாடி முடித்திருக்கிறார். தமிழில் ஒரே நாளில் 19 பாடல்கள் பாடியிருக்கிறார். இந்தியில் ஒரே நாளில் 16 பாடல்களைப் பாடியிருக்கிறார். பிரமிப்பாய் இருக்கிறது அல்லவா !!

இந்தக் குரலை இந்தித்திரையுலகிற்கு அறிமுகம் செய்ததன் மூலம் பாலசந்தர் இந்தி சினிமாவின் இசை உலகிலும் பெயரைப் பதிவு செய்து கொண்டார். ஆனால் இசையமைப்பாளர் 'லக்ஷ்மிபதி ஒத்துக்கொள்ளவில்லை. மதராசிப் பையன் இந்தி பாடினா சரியா வராது' என பலமாய் மறுத்தார். எஸ்.பி.பி பாடல்கள் எதையும் அவர் கேட்டதில்லை. பாலசந்தர் புன்னகையுடன் சொன்னார். 'அதனால தான் அவன் வேணும். கதாநாயகனுக்கு இந்தி தெரியாது. அதனால பாட்டுப் பாடறவனுக்கு இந்தி தெரியாம இருக்கிறது நல்லது தான்'.

தமிழ்ப் பையன் கமலஹாசனுக்கும், இந்திப் பெண் ரதி அக்னிகோத்ரிக்கும் இடையேயான காதல் தான் கதை. அதே மரோ சரித்ரா கதை. தெலுங்கு படத்தில் நடித்தவர்களில் சரிதாவைத் தவிர மற்ற அனைவரும் இந்திப் பதிப்பிலும் நடித்தார்கள். சரிதாவுக்கு இந்திப் பெண்ணுக்குரிய தோற்றம் இல்லாததால் அந்தக் கதாபாத்திரத்துக்கு ரதி தேர்வுசெய்யப்பட்டார்.இந்தப் படம் பாக்ஸ் ஆபீஸை அடித்து நொறுக்கியது என்று சொல்லலாம். இந்தப் படத்தின் வசூல் பத்து கோடி ரூபாய். 1981ம் ஆண்டு இது ஒரு மாபெரும் சாதனை வசூல்.

எஸ்.பி.பிக்குக் கிடைத்த தேசிய விருதைத் தவிர, இந்தப் படம் மூன்று பிலிம் ஃபேர் விருதுகளையும் கைப்பற்றியது. சிறந்த எடிட்டிங், சிறந்த பாடல் வரிகள், சிறந்த திரைக்கதை வடிவம் ஆகிய பிரிவுகளில் விருதுகள் கிடைத்தன. பத்து பிரிவுகளுக்கு இந்தப் படம் பரிந்துரை செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

---

II ஆம் பக்கத் தொடர்ச்சி...

இப்படி சிங்கத்தை பார்த்து பீதி கொள்வது போல், பண கஷ்டம் வரும்போதும் எம் உடலும் மனமும் தயார் நிலைக்கு செல்கிறது. சில பணச்சிக்கல்கள் உயிராபத்தான நிலைக்கு எம்மை இட்டுச்செல்லலாம். அப்படியான சந்தர்ப்பங்கள் எம்மில் அந்த fight or flight response இனை தூண்டுவது நியாயமானதே. ஆனால், இந்த ஒரு மனிதரோடு கூடப்பிறந்த இயல்புநிலை, பணச்சிக்கல் வரும்போது, வாழ்வா சாவா என்ற மனநிலைக்கு எம்மை தள்ளி, அவசர முடிவுகளை எடுக்க தூண்டிவிடுகிறது.

உங்களை ஒரு சிங்கம் துரத்துகிறதென்றால் அந்த மனித–மிருக உள்ளுணர்வு மிக முக்கியம். ஆனால், பல சந்தர்ப்பங்களில், சிக்கலான பணம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு இந்த உள்ளுணர்வு ஒரு பிரச்சனையாகி விடுகிறது என்கிறார் Klontz. உணர்வுகள் எல்லைமீறும் போது, மனம் விவேகமாக சிந்திப்பதை மறந்துவிடுகிறது. இந்த உணர்வுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர என்ன செய்யலாம்? எதிர்காலம் பற்றிய பயங்களை தவிர்க்காமல், நீங்கள் கற்பனையில் அப்படியான சந்தர்ப்பங்களை எப்படி அணுகுவீர்கள் என்று திட்டமிட்டு பார்க்கலாம். உதாரணமாக, வேலையை இழந்தால் என்ன செய்யலாம்? வீட்டு அழசவபயபந இனை கட்ட முடியாமல் போனால், என்ன செய்யலாம்? சில தீர்வுகளை ஆராய்ந்து பார்ப்பது, உங்கள் நிகழ்கால நிம்மதிக்கு உதவியாக இருக்கும்.

**3. மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் ஒரு புதிய கண்ணோட்டத்தை பெறுங்கள்**

தற்பொழுது பொருளாதார நிலை மோசமாக இருந்தாலும், நாளடைவில் அது பழைய நிலைக்கு திரும்பும் என்பது நிபுணர்கள் நம்பிக்கை. அதே வேளை, பணக்கவலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எங்கள் உடல் மற்றும் உள ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. சமூகத்தில் சிறு சிறு உதவிகளை செய்வதும் உங்கள் தயாள



குணத்தை நடைமுறைப்படுத்துவதும், உங்களுக்குள் ஒரு மன நிறைவையும், பணக் கவலை சார்ந்த ஒரு புதிய கண்ணோட்டத்தையும் கொடுக்கும். கொடுக்கல் வாங்கலில் நாம் எப்பொழுதும் சரிக்கு சரி இருக்கவேண்டும் என எதிர்பார்ப்போம். ஆனால், மற்றவர்களுக்கு நீங்கள் செய்யும் சிறு சிறு உதவிகள் கூட பெரிய அளவிலான மாற்றங்களை கொண்டுவரும் என்பது தான் உண்மை. Food bank இற்கு நன்கொடை வழங்குவதாக இருக்கட்டும், அல்லது வயது முதிர்ந்த ஒரு அயலவருக்கு பலசரக்கு வேண்டிக்கொடுப்பதாக இருக்கட்டும், 'சிறு துளி பெரு வெள்ளம்' ஆகும்.

இந்த தொற்றுநிலை பலரையும் பல்வேறு விதத்தில் பாதித்துக்கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் பொதுவான ஒரு நெருக்கடியாக இருக்கிறது. எப்படி இன்னொருவருக்கு நாம் உதவ முடியும் என்று நாம் சிந்திக்கவேண்டிய ஒரு காலமாக இது இருக்கிறது.

இந்த பேராசிரியர்கள் மனித மனங்களின் பேராற்றலை பற்றி சொல்கிறார்கள். தற்போதைய நெருக்கடி நிலை அச்சத்தை கொடுத்தாலும், அமைதி கொள்ளுங்கள். மனிதர்களால் எந்த ஒரு இடரில் இருந்தும் மீண்டு வரக் கூடிய வலிமை இருக்கிறது என்கிறார்கள். மனிதர்களுக்கு இருக்கும் ஒரு அற்புத சக்தி இது – தாக்கப்படுகிறோம். நொருங்கிப்போகிறோம். பின் மீள எழுகிறோம். ஒரு புதிய யதார்த்தத்துக்கு இசைவாக்கப்படுத்தி கொள்கிறோம். இது நிச்சயம் நடக்கத்தான் போகிறது என்கிறார் Klontz அதுவே பின் எங்கள் புதிய இயல்பு நிலை என ஆகிவிடும்.




## கறுப்பு வெள்ளை நினைவுகள்

# காதலிக்க நேரமில்லை ரவிச்சந்திரன்



இன்றைக்கு சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் திரையுலகில் நுழைவது என்பது அவ்வளவு சாதாரணமான விஷயம் அல்ல. அதிலும் நடிப்புத்துறையில் நுழைவது பகீரதப் பிரயத்தனம். எடுத்த எடுப்பிலேயே கதாநாயகனாக அவதாரம் எடுத்துவிட முடியாது. பல படங்களில் சின்னசின்ன வேடங்களில் நடித்தபின்பு, சில ஆண்டுகள் கழித்தே ஆக முடியும். சிலருக்கு பல கருப்பு வெள்ளைப்படங்களில் நடித்த பின்பே கலர்ப்பட வாய்ப்புக்கள் கிடைக்கும். சிலருக்கு முத்லில் சில படங்கள் தோல்விகளைக்கண்ட பின்புதான் வெற்றிப்படங்கள் அமையும். சிலருக்கு முதலில் சிறிய இயக்குனர்களிடம் நடித்த பின்பே பெரிய இயக்குனர்கள் அறிமுகம் கிடைக்கும்.

### முதல் படத்திலேயே கதாநாயகன்

முதல் படத்திலேயே பெரிய டைரக்டரின் இயக்கம் முதல் படமே கண்ணைக்கவரும் வண்ணப்படம்.

முதல் படமே 200 நாட்கள் ஓடிய மாபெரும் வெற்றிப் படம் காதலிக்க நேரமில்லையில் நடிக்க நேர்ந்த சம்பவம் குறித்து ரவியே ஒரு தொலைக்காட்சியில் சொல்லியிருந்தார். 'மலேசியாவிலிருந்து [அப் போது மலேயா] கப்பலில் சென்னை வந்து, தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருந்த நான், திருச்சிக்குச்செல்ல வேண்டிய ரயிலைத்தவற விட்டதால், வீடு திரும்ப நேர, மறுநாள் காலை என்னைச்சந்தித்த ஒளிப்பதிவாளர் பி.என்.சுந்தரம், ஸ்ரீதர் எடுக்கும் புதுப்படத்துக்கு புதுமுகம்

தேடுவதாக சொல்லி என்னை அழைத்துப்போனார். மிகவும் ஒல்லியாக இருந்த நான், 'நமக்கெல்லாம் எங்கே சான்ஸ் கிடைக்கப்போகிறது' என்ற எண்ணத்தில் டைரக்டர் ஸ்ரீதர் முன்பாகவே சிகரெட்டும் கையுமாக அசால்ட்டாக இருக்க, என்னுடைய அந்த அலட்சிய போக்கே ஸ்ரீதருக்குப் பிடித்துப்போக என்னை தேர்ந்தெடுத்துவிட்டார்' என்று தான் திரைக்கு வர நேரந்த அனுபவத்தைச் சொல்லியிருந்தார்.

### 'காதலிக்க நேரமில்லை'

முதல் குட்டு மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்ப, முதல் படத்தில் புதுமை இயக்குனர் ஸ்ரீதரின் இயக்கத்தில் அறிமுகமானார் ரவி. அப்படத்தில் மூன்று ஜோடிக் காதலர்கள். அதில் ஒரு நாயகனையும் நாயகியையும் அறிமுகப்படுத்தினார் ஸ்ரீதர். வழக்கமாக இவ்வாறு அறிமுகம் செய்யும்போது புதிய நாயகனையும், புதிய நாயகியையும்தான் ஒருஜோடியாக எல்லோரும் போடுவார்கள். ஆனால், ஸ்ரீதர். இதிலும் புதுமை செய்ய எண்ணி, பழைய நடிகர் முத்துராமனுக்கு புது நடிகை காஞ்சனாவை ஜோடியாகவும், புது நடிகர் ரவிச்சந்திரனுக்கு பழைய நடிகை ராஜஸ்ரீயை



ஜோடியாகவும் போட்டார். அதாவது ஒவ்வொரு ஜோடியிலும் ஒரு அனுபவம், ஒரு அறிமுகம்.

'காதலிக்க நேரமில்லை' கதையை இங்கே சொல்வது, கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல. அந்த அளவுக்கு தமிழ் ரசிகர்களிடையே பிரபலமான படம் அது. அதில் ஸ்ரீதர், கோபு, கண்ணதாசன், விஸ்வநாதன் – ராமமூர்த்தி, வின்சென்ட், பி.என் சுந்தரம், எடிட்டர் என்.எம்.சங்கர் ஆகியோர் பெரிய ராஜாங்கமே நடத்தியிருந்தனர்.

முதல் படத்திலேயே ரவிச்சந்திரனுக்கு பி.பி.எஸ் குரலில் நான்கு அருமையான பாடல்கள். [முத்துராமனுக்கு ஜேசுதாஸ் குரலில் இரண்டு பாடல்களும் சீர்காழியின் குரலில் ஒரு பாடலும் தான். அதுபோக நாகேஷ் சச்சு ஜோடிக்கு ஒரு பாடல்]. விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் அத்தனை பாடல்களும் தேன் சொட்டின. இன்றுவரை அவையனைத்தும் மக்களால் பெரிதும் விரும்பிக்கேட்கப்படுகின்றன.

காஞ்சனாவையும், ராஜஷ்ரீயையும் ரவிச்சந்திரன் கிண்டலடிக்கும் பாடும் 'உங்க பொன்னான கைகள் புண்ணாகலாமா?' என்ற சாதாரண பாடலில்தான் கேமரா என்ன விளையாட்டு விளையாடியிருக்கும்?. ஆளியாறு அணைப்பகுதியில் படமாக்கப்பட்ட வெளிப்புறக்காட்சிகள் கண்ணுக்கு விருந்து படைத்தன. 'அனுபவம் புதுமை' மற்றும், 'நாளாம் நாளாம் திரு நாளாம்' பாடலின் மெலோடியைப்பற்றியெல்லாம் நினைத்துப்பார்க்கமுடியாது. 'நாளாம் நாளாம்' பாடலை செட்போட்டுப் படமாக்கியிருந்தது கொஞ்சம் நெருடலாக இருந்தது. அதைவிட சென்னை மெரீனாவில் படமாக்கியிருந்த 'என்ன பார்வை உந்தன் பார்வை' காட்சியமைப்பிலும், படமாக்கிய விதத்திலும் சூப்பர். படம் துவக்கத்திலிருந்து 'வணக்கம்' வரை நகைச்சுவை கொடிகட்டிப் பறந்தது. காதல் ஜோடிகளோடு சேர்ந்துகொண்டு, பாலையா, நாகேஷ், சச்சு, பிரபாகர் [சச்சுவின் அப்பா] ஆகியோரும் நகைச்சுவையில் கலக்கினர். அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது சித்ராலயா கோபுவின் வசனங்கள். போதாக்குறைக்கு படத்தில் ரவிச்சந்திரன் வைத்திருக்கும் அந்த டப்பா காரும் நமக்கு சிரிப்பை மூட்டியது. அதுவரை சோகம், செண்டிமெண்ட் படங்களில் நடித்து வந்த முத்துராமனுக்கு, காதலிக்க நேரமில்லையில் அவர் ஏற்றிருந்த 'டூப்ளிகேட்' பணக்கார கிழவன் வேடமும், அதில் அவர் கொடுத்த நகைச்சுவை சரவெடிகளும் திரையுலகில் அவருக்கு மிகப்பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. முதன்முதலாக ஜெமினி கலர் லேபரட்டரியில் வண்ணப்பிரதிகள் தயாரானதும் இப்படத்துக்குத்தான். [அதற்குமுன் வந்த கர்ணன், படகோட்டி ஆகிய ஈஸ்ட்மன் கலர்ப்படங்கள் மும்பை ஃபிலிம் செண்ட்டரில் ப்ராஸஸிங் செய்யப்பட்டன].

முதல் படமே 200 நாள் படமாக அமைய, 'வெள்ளிவிழா நாயகன்' என்ற சிறப்புப்பட்டத்துடன் திரையுலகில் வலம் வரத்துவங்கினார் ரவிச்சந்திரன். அடுத்து இவர் கே.ஆர்.விஜயா நடித்த இதயக்கமலம் மறக்கமுடியுமா.

**ரவிச்சந்திரன் மறைவு**
**25.07.2011**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


EurAsian-Tour
Emirates
VALUTRANS
MONEY TRANSFER
EurAsian-Tour
Further Str.146
41462 Neuss
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
ஆடி சேல்
சிறப்புத்
தள்ளுபடி
'Jasmine Silk House"
Fester Str.50-
40882 Ratingen
Tel: 02102 844744
HP: 0173 1937 325


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria
Money Transfer
VALUTRANS
MONEY TRANSFER
MoneyGram.
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303
Fax: 02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197 Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


before
after
Nachher
G.Vijay Home Designer
VS
உங்கள் வீடுகளை சிறப்பாக
வடிவமைக்க நாடுங்கள்!
Sauber- Professuonell- Punktlich- Preiswert
Web.www.vijay-home-designer.de
சிறந்த தொழில்
தேர்ச்சிபெற்றவர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
Facebook:
Vijay Home Designe Gunaratnam 0176 7221 8466
inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
e.mail: G.Vijay@outlook.de


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Double Horse
Nila
AGAM
அ.க.ம்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
BTM
Aachi
Rabeena
Tel: 0231 860 26 96
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698